Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 13
இதழ் 11
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஞாயிறு மாசி 9 ஜுஹஜ் 24 ஞாயிற்றுக்கிழமை (21-2-71)

25 FEB 1971

நெல்
அறுவடை செய்வதற்கு
மிகச்சிறந்த
குரங்கு மார்க்
அரிவாள்
மிக மலிவானவிலையில் கிடைக்கும்
ஸ்டீல்சன்ஸ்
287, 289, ஸ்ரான்லி ரோட்-யாழ்ப்பாணம்.
போன்: 7035

## வவனியா மாவட்டத்தில்

# ஆசிரியர்கள் இடமாற்றத்தால் பாட சாலைகள் மூடப்பட்டன

## கல்வி அதிகாரிக்கும், வவனியா எம். பி.க்கும் மக்கள் புகார்

நெடுங்கேணி, சனி

அண்மையில் நடைபெற்ற ஆசிரியர்களின் இடமாற்றத்தின் விளைவாகப் பல பாடசாலைகள் வவனியா மாவட்டத்தில் மூடப்படுள்ளன: பல ஆசிரியர்கள் இம்மாவட்டத்திலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டபோது அப்பாடசாலைகளுக்கு வேறுஆசிரியர்கள் நியமிக்கப்படாததிலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

வவனியா வடக்குப் பகுதியில் உள்ள தண்டுவான், ஊஞ்சல்கட்டி ஆகிய கிராமத்திலுள்ள பல பாடசாலைகள் ஆசிரியர் இன்மையால் மூடப்பட்டுள்ளன. தண்டுவானில் இருந்த இரு ஆசிரியர்களும் ஊஞ்சல் கட்டியில் இருந்த ஒரு ஆசிரியரும் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்றுப் போனதும் அப்பாடசாலைகளுக்கு வேறு ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை.

சில பாடசாலைகளில் இரு ஆசிரியர்கள் மட்டுமே கடமையாற்றுவதால் அவர் லீவு எடுக்கும் காலங்களில் அப்பாடசாலைகள் மூடப்பட்டுவிடுகின்றன.

குளவிசுட்டான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நான்கு ஆசிரியர்களுக்கு சராசரி இருந்தும் ஒரு ஆசி

(8-ம் பக்கம் பார்க்க)

## முதலாளித்துவ ஆதிக்கம் இன்னும் மறையவில்லையாம்

### டாக்டர் என். எம். சொல்கிறார்

நாவலப்பிட்டி, சனி

லங்காதோட்டத் தொழிலாளர் யூனியன் 27-வது வருடாந்த மகாநாடு 'மூல்லோயா கோவிந்தன்' அரங்கில் கலாநிதி என். எம். பெரேரா தலைமையில் நடந்தது. அவர் தமது தலைமை உரையில் கூறியதாவது:-

1970ம் ஆண்டு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பல்லாண்டுகாலமாக தொழிலாளர் வர்க்கம் எதிர்பார்த்திருந்த எண்ணங்களை பிரதிபலிக்கும் வகையில் ஒரடி முன்வைத்து நடக்க முற்பட்[illegible]ளோம். இது நமது [illegible]ன்னேற்றத்திற்கும் சுபீட்சத்திற்கும் வழிவகுத்து நடக்க கிடைத்திருக்கும் அரியவாய்ப்பாகும். இந்த நாட்டு மக்களை முன்னேற்றக் கூடியதொரு பாக்கியம் அடுத்த ஆண்டு முதலே ஏற்படலாம்.

இதுவரை கோரிக்கைகளை முன்வைத்தே போராடினோம்; புதிய கோரிக்கைகள் புதிய சமுதாயம்ஒன்றைஏற்

(5-ம் பக்கம் பார்க்க)

## 'போர்வார்ட் புளக்' தலைவர் குத்திக் கொல்லப்பட்டார்

புதுடில்லி, பெப். 20

அகில பாரத 'போர்வார்ட் புளக்' கட்சியின் தலைவர் திரு. ஹேமந்தகுமார் பாசு இன்று வடக்கு கல்கத்தாவில் வைத்து குத்திக்கொல்லப்பட்டார்.

76 வயதான திரு. பாசு மேற்கு வங்கத்தின் முன்னைய கூட்டுமுன்னணி அரசில் ஒரு மந்திரியாக இருந்தார். இந்த முறைதேர்தலில் ஷியாம்புகாம் என்ற சட்டசபைத் தொகுதியில் வேட்பாளராக இருந்தார்.

இது சம்பந்தமாகஇரண்டு பேர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் நாய்களுடன் துப்பறியும் நிபுணர்கள் கொலை சம்பந்தமான மர்மத்தைக் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

பல அரசியல் தலைவர்கள் திரு. ஹேமந்தகுமார் பாசுவின் மரணத்தையொட்டிக் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

விடுதலைவீரர் சுபாஷ் சந்திரபோஸ் போர்வாட்வார்ட்புளக்கட்சியை ஆரம்பித்த காலம்தொட்டு இவர் அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

ஆதரவாளர்களுடன் பேசிக்கொண்டிருந்த பொழுது அவரை விஷமிகள் யாரோ குத்திக்கொன்றுவிட்டதாகப் பொலிசார் கூறினார்கள். ஆஸ்பத்திரிக்கு

(8ம் பக்கம் பார்க்க)

## சோஷலிஸக்கல்வி அபிவிருத்திக்கு 56கோடி ரூபாய் ஒதுக்கீடு

### பதில் கல்வி அமைச்சர் தகவல்

கோட்டை, சனி

பொருளாதார சிக்கல்கள் இருந்த போதிலும் அரசாங்கம் சோஷலிஸக் கல்வித் திட்டத்திற்காக 56 கோடி ரூபாய் ஒதுக்கீடுசெய்திருக்கின்றது.

இத்தகவலை பதில் கல்வி அமைச்சர் திரு. பி. வை. துடாவை வெளியிட்டார். கம்பஹாவில் புதிய கைத்தொழில் கல்வித்திட்டத்தை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் திரு. துடாவை இந்தத் தகவலை தெரிவித்தார்.

கிராமப்பகுதிகளில் கைத்தொழில் கல்வியை அபிவிருத்திசெய்யும் திட்டத்தின் ஓர் அம்சமாகவே இது கம்பஹாவில் ஆரம்பிக்கப்படுவதாக அவர் சொன்னார்.

## டெஸ்ட் கிரிக்கெட்

# இந்தியா 183—5

கிங்ஸ்டன், பெப். 20

மேற்கிந்திய கிரிக்கெட் கோஷ்டிக்கும் இந்தியக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில், ஜமேக்காவில் ஆரம்பமாகியுள்ள 1-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 2-வது நாளான இன்று இந்தியா 5 விக்கெட்டுகளை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது.

சர்தேசாய் 81 ஓட்டங்களுடனும், சோல்காட் 50 ஓட்டங்களுடனும் ஆட்டமிளக்காது இருக்கின்றனர்.

இன்றைய ஆட்டம் மழை காரணமாக ஒருமணித்தியாலம் தாமதமாகவே தொடங்கியது. முதல்நாள் மழை காரணமாக ஆட்டம் முற்றாகக் கைவிடப்பட்டது.

## நாளை வரும் கி. வா. ஜ. நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

''கலைமகள்'' ஆசிரியரும் தமிழ் அறிஞருமான திரு. கி. வா. ஜகந்நாதன் நாளை பிற்பகல் 4-30 மணிக்கு பலாலி விமானநிலையத்தில் வந்திறங்குவார்.

அன்று 22-ந் திகதி மாலை தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் உரை நிகழ்த்துவார். 23-ந் திகதி சிவராத்திரி இரவு திருக்கேதீச்சரத்தில் 'சிவராத்திரி மகிமை' பற்றிப் பேசுவார். 24-ந் திகதி கொழும்பிலும் 25-ந் திகதி கண்டியிலும் உரை நிகழ்த்திய பின் 26-ந் திகதி கொழும்பு திரும்பி அங்கிருந்து சென்னைக்குப் பயணமாவார்.

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு
ONE-DOLLAR
டொலர்
அலுமினியம்

MANOHARA
Jaffna
Daily 3 Shows
Charlton Heston
Lee Majors
in
WILL PENNY
(Action film) -(Technicolor)

REGAL Jaffna
Daily 3 shows
Poya days 10-30 a. m.
Audie Murphy
in
BULLET FOR A BADMAN

## புதிய நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, சனி

ஊர்காவற்றுறை புனித மேரி பெண் பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகிகள் தேர்வின் போது பின் வருபவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: வண. சகோதரி மக்டலீன். உபதலைவர்: திரு ஏ எஸ். செல்லத்துரை காரியதரிசி திருமதி புனிதசீலி அந்தோனிமுத்து. தனாதிகாரி: திருமதி சுகிர்தம் பர்னாந்து நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர். - பி.எஸ்சரோஜா வீரப்பா நடித்த
ஜெனோவா
புதிய கொப்பி

ராணி சினிமா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி கணேஷன் - ஜெயலலிதா நடித்த
எங்கிருந்தோ வந்தாள்

6-வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயாநாட்கள் 4 காட்சிகள்
கெப்பிட்டல் (கொழும்பு
பிளாஸா (கொழும்பு
சிவாஜி
காஞ்சனா
எம். என்.
நம்பியார்
நா
முத்துராமன்
இன்னும் பலர் நடித்த





சிவந்த மண்

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஞாயிறு 21—2—71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 இசைவேளை, 8-15 இன்னிசை மியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 சிறுவர்விருந்து.

இரவு 6-15 முத்திநெறி, 6-35 பெண்ணுலகம், 7-00 ஞானமஞ்சரி, 7-15 சித்திரம், 7-45 வாத்தியஇசை, 8 00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 இசைப்பயிற்சி, 10-30 செய்தித் தொகுப்பு.

## கிளிநொச்சி இ.போ.ச. டிப்போ திறப்புவிழா

கிளிநொச்சி, சனி

கிளிநொச்சியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இ. போ. ச. டிப்போ இம்மாதம் 23ம் திகதிகாலை 10 மணிக்குதிறந்து வைக்க படவிருக்கிறது.

டிப்போ திறப்பு விழாவில் போக்குவரத்து உதவியமைச்சர் திரு. ஹேரத், இ.போ ச. தலைவர் திரு. அனில் முனசிங்கா ஆகியோர் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்கள்.

வெலிங்டன் சினிமா
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
ஏ.வி.எம் ராஜன்-சாரதா நடித்த
துலாபாரம்
(தமிழ்)

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
எம்.ஜி.ஆர். - ஜமுனா நடித்த
தாய் மகளுக்குக் கட்டிய தாலி

சுன்னாகம்
நாகம்ஸ் சினிமா
தினசரி 3 காட்சிகள்
போயாதினங்களில் 4 காட்சிகள்
ரவிச்சந்திரன் - பாரதி நடித்த
வாலிப விருந்து

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 2561.

நாகமுத்து குணம்
நம்பர் 61
(High Street)
வெள்ளவத்தை,
கொழும்பு 6.
காலஞ் சென்றவர்

குமநாதர் நாகமுத்து கைம்பெண் மீநாட்சி, காரைநகர் மேற்கு. யாழ்ப்பாணம்.

தத்துவகாரி

குணம் சபாநடேசன் உம் வயது குறைந்தவர்.

நாகமுத்து குணம் கைம்பெண் அருளாம்பிகை.

எதிர்வாதிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 2561-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1971-ம் ஆு சித்திரை மீ 26 உ திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப் படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைநகர் வடக்கு இறை "முல்லைப்புலவு" என்னும் காணி நிலப்பரப்பு 7-ம் தென்னை மரம், பனை மரமும் துரவும். எல்லை கிழக்கு தம்மையா கண்ணகி, வடக்கு ப. வைத்திலிங்கமும் செல்லையா செகசோதி, மேற்கு கந்தையா பாலசுப்புறமணியம், தெற்கு ஒழுங்கைக்கு முன்னும் சுப்புறமணியம் ருக்மணி.

இ. கனகரெத்தினம்,
கொமிஷனர் &
விலை மதிப்பாளர்.
35/2, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். 2727

## சைவசமய அறிவுப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சாந்தையமடம் - சைவசமய அபிவிருத்திக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட சைவசமய அறிவுப்போட்டியில் பரிசில் பெறுவோர் விபரம் வருமாறு:

ஆரம்பப் பிரிவு: மசித்திர சிறி, சி அமிர்தநடேஸ்வரன், கு ரோகினி.

கீழ்ப்பிரிவு: க பாலேந்திரன், க ஜெயந்தன், கி ஆனந்தன்.

மத்தியபிரிவு: ந வசந்தி, வே கலைவாணி, க ஜெயகுமாரி.

மேற்பிரிவு: க முகுந்தன், வ தேவராஜன், மி சண்முகராசா.

இப்பரிசில்கள் மகாசிவராத்திரியன்று வழங்கப்படவுள்ளன.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

குயின்ஸ் இன்குபேற்றர்கள் (Queens Incubators) நூறு முட்டைகள் அடைகட்டக்கூடியது. தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும். ஞானம் இன்டஸ்றியல் வேர்க்ஸ், பருத்தித்துறை. 2844

நல்லூர் வடக்கில் ஒன்பது பரப்புக்காணி முழுவதும் இருபத்தேழாயிரம். துண்டுகளாகவும் வாங்கலாம்' உருமையாளரின் விலாசம். (தரகரில்ல) 92, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. 2846

## பாராட்டு

அல்லைப்பிட்டி, சனி

அரசாங்கம் தமிழ் மொழியை எவ்விதம் புறக்கணிக்கின்றது என்பதைப் பற்றிய கண்காட்சி ஒன்றை வேலணையில் நடாத்தி அதன் மூலம் தமிழ் மக்களுக்கு அரசாங்கம் செய்யும் அநீதிகளை விளக்கப்படுத்தியதற்கு ஊர்காவற்றுறைத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினத்திற்கு தீவுப்பகுதி ஐக்கிய இளைஞர் முன்னேற்றக்கழகத் தலைவர் வைத்தியக்கலாநிதி கே. வீ. கே. ஜெயச்சந்திரமூர்த்தி பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

## இன்றைய பலன்

மாசி மாதம் 9-ந் திகதி (21-2-71)

மேஷம்- கனிவான பேச்சு சாந்தம் போல் பார்வை, கன்னியர் உறவுக்கு காதலுக்கும் இடமுண்டு. கவர்ச்சிகரமான நாள்.

ரிஷபம்- பகைமூட்டம் தோன்றும், பதட்டமும் உடன் சேரும். மிகையான போக்கினாலே மனதும் பாழாய்ப்போகும்.

மிதுனம்- இல்லத்தில் இனிமை மலரும். உறவினர்கள் கூடுவர். உல்லாசமான பொழுதுபோக்கும் உண்டு.

கடகம்- எண்ணியதில் தடைகள் தோன்றும். ஏமாற்றம் தாக்கும். நண்பர்களும் காலை வாரிவிடக்கூடும், நிதானம் வேண்டும்.

சிம்மம்- பிறருக்கு உதவுவதில் முன் நிற்பீர்கள். இதன்மூலம் பணமும் செலவாகும். அரசியல்வாதிகளுக்கு அதிர்ஷ்டகரமான தினம்.

கன்னி- பொறியியலாளருக்குப் பொன்னான தினம். புகழும், பொருளும் குவிவதற்கான சந்தர்ப்பமுண்டு.

துலாம்- விவசாயிகள் வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும், எதிர்பார்த்த கடன் கிடைக்கும், சிலருக்கு அரசினர் ஆதரவும் உண்டு.

விருட்சிகம்- உறவுமுறைகளில் வெடிப்பு ஏற்படும். பணவிவகாரத்தின் மூலம் பகை தோன்றலாம்,

தனுசு- ஆத்திரப்பட்டதால் அனர்த்தங்கள் விளையக்கூடும். எதிலும் பொறுமையுடன் இருப்பது விரும்பத்தக்கது.

மகரம்- மேலதிகாரிகளுடன் தொடர்புகொள்வதற்கு இன்று நல்லநாள். இனசனங்கள் மத்தியில் செல்வாக்குப் பெருகும்.

கும்பம்- துன்பத்தின் ரேகைகள் படரும். தூக்கம் கெடும், எதிர்பார்த்ததில் தடை ஏற்படும். எதிலும் நிதானம்வேண்டும்.

மீனம்- வீட்டில் நலன் தரும் சம்பவங்கள் நடைபெறும். தொழில்துறையிலும் வெற்றிவாகை சூடுவீர் சிறப்பான தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

கலைக்கே தன்னை அர்ப்பணித்துக்கொண்ட கலையுலக மேதை
எஸ். எஸ். வாசனின் கடைசிப் படைப்பு !
யாழ். வின்ஸர் வெண்திரையில்
தினசரி 4 காட்சிகள்
நடிகர் திலகமும் நாட்டியப் பேரொளியும் சேர்ந்து நடிக்கும் வண்ணக் காவியம்
ஜெமினியின்
விளையாட்டுப் பிள்ளை
(ஈஸ்மன் கலர்)
மற்றும் நடிகர்கள்
காஞ்சனா, பாலையா, மனோரமா, சோ, ரோஜாரமணி.
குடும்பத்துடன் பார்த்து மகிழவேண்டிய படம்.

# லாவோஸ் நிலைமை மோசமாகிறது

# வடவியட்னுமியர் பதிலடி

## முன்னேறிய தெற்கு படைகள் ஸ்தம்பிதம்

வியன்டியான், பெப். 20

வடவியட்னும் படைகள் தெற்கு லாவோஸில் மிக மூர்க்கமான எதிர்தாக்குதல் ஒன்றினை ஆரம்பித்திருக்கிறார்கள்.

லாவோஸுக்குள் முன்னேறிக்கொண்டிருந்த தென்வியட்னும் படைகள் வடவியட்னுமியரின் இந்த எதிர்த்தாக்குதலினால் தடைபட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

ரொக்கட்டுகள், பீரங்கிகள், விமான எதிர்ப்புக் கருவிகள் ஆகியவற்றினால் மிகப்பெரும் எதிர்த்தாக்குதலை வடவியட்னுமியர் ஆரம்பித்துள்ளார்களாம். லாவோஸ் பகுதியில் 20 கிலோமீட்டர் உள்ளே இந்த எதிர்த்தாக்குதல் நடைபெறுகிறது.

தென்வியட்னும் படைகள் முன்னேறமுடியாமல் தடைபட்டிருப்பதை தென்வியட்னுமியர் ஒப்புக்கொண்டுள்ளனர். ஏற்கனவே வடவியட்னுமியரின் மூன்று 'சப்ளை' வழிகளை அடைத்துவிட்டதாக தென்வியட்னுமியர் அறிவித்திருந்தனர்.

வடவியட்னுமியரின் இப்புதிய தாக்குதலின் காரணமாக தென்வியட்னுமியர் படைகளுக்கு வானப்பாதுகாப்பு அளித்துவரும் ஹெலிகொப்டர்கள் உதவிப்பணிகளில் ஈடுபடமுடியாமலிருக்கின்றனவாம்.

தென்வியட்னுமியருக்கு பலத்த சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

வடவியட்னுமியரின் எதிர்த்தாக்குதலின் காரணமாக இந்தோசீனுவில் மிக மோசமானதோர் நிலைமை உருவாகியிருப்பதாக கூறப்படுகின்றது

இதேசமயம் வடலாவோஸில் வடவியட்னும் படைகள் மூன்று அரசாங்க வெளிராணுவ முகாம்களைக் கைப்பற்றியிருப்பதாகவும் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

### பாப்பரசா விஜய ஞாபக முத்திரை

ரோம், பெப். 20

பாப்பரசரின் ஆசிய ஓசியானிய விஜயத்தை ஞாபகப் படுத்துமுகமாக வத்திக்கான் 25, 50 100, 130 220 லியர் பெறுமதியான ஐந்து இன தபால் முத்திரைகளைப் பாவனைக்கு விட்டிருக்கிறது.

### பிரதமரைச் சந்திப்பர்

மாவிட்டபுரம், சனி

சிறுபான்மை மக்களின் பிரச்சினை குறித்து பிரதமரைப்பேட்டி காண்பதென அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபை முடிவுசெய்துள்ளது. சித்திரை மாதம் கலைவிழா ஒன்றை நடத்துவதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

### பதில் காரியாதிகாரி

மாவிட்டபுரம், சனி

வலி வடக்கு காரியாதிகாரி திரு பி. எல். பற்றிக்ஸ் நிர்வாக சேவைப் பயிற்சி பெறுவதற்காக கொழும்பு சென்றுள்ளதால் அவரது இடத்துக்கு பதில் காரியாதிகாரியாக என் மாணிக்க நடராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

------

### சபாநாயகர் மார்ச் 1-ல் யாழ். வருகிறார்

மாவிட்டபுரம், சனி

ஆட்சிமன்ற சபாநாயகரும், கோட்டை எம். பியுமான திரு. ஸ்ரான்லி திலகரத்தின அடுத்தமாதம் 1-ம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

மக்கள் அரசு ஏற்பட்டபின் முதல் தடவையாக வடக்குக்கு விஜயம் செய்யவிருக்கும் இவர் பலவைபவங்களில் கலந்துகொள்ளுவார்.

மார்ச் 2-ம் திகதி இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலைவிஞ்ஞான ஆய்வுகூடத்துக்கு அடிக்கல் நாட்டுவார் இக்கட்டிடம் கல்கிபீடி உரிமையாளர் திரு. சி சின்னத்துரையினால்வழங்கப்படும் நன்கொடையைக் கொண்டு கட்டப்படுகிறது.

யாழ் நகரில்நடக்கவிருந்த சுதந்திரதின விழாவுக்கு இவர் வருகை செய்வதாக இருந்து இறுதியில் ரத்துச் செய்யப்பட்டதுதெரிந்ததே

— —

### பாராட்டு

சுழிபுரம், சனி

பண்டத்தரிப்பு பட்டின சபையின் புதிய தலைவராக திரு. இ. செல்வரத்தினம் மீண்டும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டதைப் பாராட்டி வழக்கம்பரை தமிழ்மன்றத்தினர் பாராட்டு விழா ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

---

ஷெரன்டேட் கொலை வழக்கு

## 'ஓடிய பெண்ணைத்துரத்தி கத்தியால் குத்தினேன்'

### மேன்ஸனின் சிஷ்யை சாட்சியம்

லொஸ் ஏஞ்சல்ஸ் பெப்.20

நடிகை ஷெரன் டேட் கொலைவழக்கில் எதிரிகளில் ஒருவரான 23 வயது பாட்ரீஸியா கிரென்விங்கிஸ் நடிகையின் வீட்டுவளவில் வைத்து ஒடித்தப்ப முயன்ற அபிகெயில் போல்கரை எப்படிக் குத்தினர் என்பதை ஜூரிகள்முன் விளக்கினர்.

கொலைநடந்த பின்னர் தாம் ஒன்றையுமே உணரவில்லை என்று அவர் சொன்னர். பின்னர் 1969-ம் ஆண்டு ஆகஸ்டில் டேட் கொலை செய்யப்பட்ட மறுதினம் இரவு ரோஸ்மேரி லாபியாங்கா என்பவரை கத்தியால் குத்திக் கொலை செய்ததை அவர் ஒப்புக்கொண்டார். ரோஸ்மேரியின் கணவரின் வயிற்றில் கரண்டி முள்ளினால் குத்தியதாகவும் அவர் மார்பில் யுத்தம்என்று பொறித்ததாகவும் சொன்னர். அவர்களின் இரத்தத்தில் சால்வைத்துண்டை நனைத்து சுவரில் எழுதியதாகவும் அவர் ஒப்புக்கொண்டார்.

இந்தப்பெண் ஜூரர்கள் முன் சாட்சியமளித்துக் கொண்டிருக்கும்அதே வேளையில் ஹிப்பிகளின் தலைவனான சார்ள்ஸ் மேன்சன் தனது ஆட்டுக்கடா தாடியைத்தடவியபடி கேட்டுக் கொண்டிருந்தார். ஷெரன் டேட் கொலைவழக்கில் மேன்ஷன் குற்றவாளியாகக் காணப்பட்டது தெரிந்ததே. அவருக்கு ஆயுள் தண்டனையா அல்லது மரணதண்டனையா என்பதை தீர்மானிப்பதற்காக இப்பொழுது விசாரணைகள் நடைபெற்று வருகிறது

இந்தக் கொலைகளைச் செய்வதென தானும் இன்னும் மூன்று பெண்களும் திட்டமிட்டதாக செல்வி கிரென்விங்கிஸ் கூறினர்.

அவரது வக்கில் அவரைக் காப்பாற்றும் விதத்தில் ஷெரன்டேட் கொலை நடந்த தினத்தின் இரவு நிகழ்ச்சிகளை விவரிக்கும்படி கேட்டார்.

"நான் தலையைத் தூக்கிப் பார்த்தது நினைவிருக்கிறது. சூசான் அட்கின் (இன்னொரு சாட்சி) வேறு இரு பெண்களுடன் போராடுவது தெரிந்தது. நான் எழுந்து ஓடிப்போய் அவர்களுடன் சண்டை போட்டேன் என் கையில் கத்தி இருந்தது நினைவிருக்கிறது. அபிகேல் போல்கர் ஓட்டம் பிடித்தார். பின்கதவு வழியாகப் போய் அவரைத் துரத்திப் பிடித்துச் சண்டை போட்டு குத்தினேன் குத்திக்கொண்டே இருந்தேன்' என்று அவர் கூறினர்.

---

## அவாமி கட்சியுடன் ஒத்துப்போகத்தயார் - ஆனால்

### பூட்டோ விதிக்கும் நிபந்தனை

ராவல்பிண்டி, பெப் 20

ஷேக் முஜிபுர் ரஹ்மானின் அவாமி லீக் கட்சி தனது ஆறு அம்சத்திட்டத்தில் திருத்தம் செய்ய முன்வருமானால் புதிய அரசியல் திட்டத்தை அமைக்கும் விஷயத்தில் ஒத்துழைக்கத் தயாராய் இருப்பதாக மக்கள் கட்சியின் தலைவர் திரு. சுல்ஃபிகார் அலி பூட்டோ தெரிவித்திருக்கிறார்.

அதிபர் யாஹ்யாகானைச் சந்தித்துப் பேசிய பின்னர் திரு. பூட்டோ இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

எமது கதவு திறந்தே இருக்கின்றது. ஷேக் முஜிபுர் ரஹ்மானைச் சந்திப்பதில் நான் மகிழ்ச்சியடைவேன் என்று பூட்டோ கூறினர்.

தேசிய சட்டசபை கூடுவது சம்பந்தான திகதி நிர்ணயிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையை உத்தேசித்து அக்கூட்டத்தைப் பகிஷ்கரிப்பதற்குத் தங்கள் கட்சி எடுத்துள்ள முடிவு தவிர்க்க முடியாதது என்றும் அவர் சொன்னர்.

------

### ஆலயநிர்மாண வேலைதுரிதம்

வேலணை, சனி

வேலணை வங்களாவடி திரு. முருகன் ஆலய நிர்மான வேலைகள் மிகத்துரிதமாக நடைபெறுகிறது. இவ் ஆலய கட்டிட வேலையை பூர்த்தி செய்வதற்கு மக்களிடமிருந்து நிர்வாகத்தினர் உதவி கோரியுள்ளனர்.

வேலணையின் மத்தியிலும் நயினதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்குச் செல்லும் வீதியிலும் அமைந்துள்ள இவ் ஆலயம் நிர்மாணிப்பது மிகப் பொருத்தமானதென மக்கள் கூறிக்கொள்வதுடன் தங்களான உதவிகளையும் செய்து வருகின்றனர்.

---

## ஐ. நா. நிலத்திலும் இஸ்ரேல் ஆக்கிரமிப்பு?

வாஷிங்டன், பெப் 20

ஜெருசலத்தில் ஐ. நா. ஸ்தாபனத்துக்கு சொந்தமான நிலத்தில் இஸ்ரேலியர் ஆக்கிரமிப்பு நடத்துவதாக யுதாண்ட் குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

ஐ நா.வின் காப்பு உரிமையை மீறிவிட்டதாக இஸ்ரேல் மீது அவர் குறிப்பட்டுள்ளார்.

ஐ. நா.வுக் குரிய இடத்தில புல்டோசர்களைக் கொண்டு செப்பனிடும் வேலைகளை நிறுத்தும்படி இஸ்ரேலை அவர் கேட்டிருக்கிறார்.

ஐ. நா. விலுள்ள இஸ்ரேலியா தூதுவர் யுதான்டின் இந்தக் குற்றச்சாட்டை மறுத்திருக்கிறார்.

**எகிப்து திட்டம் பற்றி இஸ்ரேல் ஆலோசனை**

இஸ்ரேல் தான் கைப்பற்றியுள்ள அரபு நிலத்திலிருந்து விலகிக் கொள்வதாயின் அந்த நாட்டுடன் அமைதி ஒப்பந்தம் செய்து கொள்ளத்தயார் என்று ஐக்கிய அரபுக் குடியரசு செய்துள்ள யோசனைகள் பற்றி இஸ்ரேலிய அரசு ஆலோசனை செய்வதாகத் தெரிகின்றது. இதன் பொருட்டு ஐ. நா. விலுள்ள இஸ்ரேலிய தூதுவர் திருப்பியழைக்கப்பட்டிருக்கிறார்.

எகிப்தியரின் மேற்படி யோசனை சிந்தனைக்குரியது தான் என்று இஸ்ரேலிய அமைச்சர்களில் ஒருவரான கலிலி என்பவர் கூறியிருக்கிறார். நேரடியாகப் பேச்சு நடத்த ஏன் முன்வரக்கூடாது என்றும் அவர் கேட்டிருக்கிறார்.

---

"புதிய அரசியலமைப்பில்

## இந்துசமய நிறுவனங்களின் சொத்துக்கு பாதுகாப்பு வேண்டும்"

கொழும்பு, சனி

இந்து கலாச்சார வைபவங்களை ஊக்குவித்துவத, அரசாங்கம் நன்கொடைகள் வழங்க வேண்டும். சகல இந்து ஆலயங்களும், நிறுவனங்களும், மன்றங்களும், சமய சம்பந்தமான தேவைகளுக்கும் நோக்கங்களுக்குமாக அசைவுள்ள அசைவற்ற சொத்துக்களை உடைமைப்படுத்தி வைத்திருக்கவும், விற்பனை செய்யவும் உரிமை வேண்டும்' என்று கொழும்பு விவேகானந்த சபையினர் அரசியல் அமைப்பு அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ள மகஜரில் கேட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பில் இவை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று விவேகானந்தாசபை வலியுறுத்தியுள்ளது.

அடிப்படைத் தீர்மானம் 3-ல் இந்து சமயத்திற்கும் இந்நாட்டில் அதற்குரிய இடமும் பாதுகாப்பும் அளிக்க வேண்டிய புறம்பான பிரிவொன்று சட்டத்தில் இடம்பெறவேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

### அண்ணு விழா

சுழிபுரம், சனி

சுழிபுரம் அரசினர் விக்ரோறியாக் கல்லூரி மாணவர் மன்றத்தினர் அண்ணு விழா நடத்துவதற்கு முடிவு செய்துள்ளனர்.

ரூபா 1000|-தொடக்கம்
ரூபா 5000|- வரை சேமிப்புக்கு
வருடம் 7 சத வீத வட்டி
கொடுக்கப்படும்
இச் சேமிப்பை 7 நாள் அறிவித்தலில்
எப்பொழுதும் எடுக்கலாம்.
தம்பி அன் கோ.,
284, காங்கேசன்துறை வீதி :: வண்ணார்பண்ணை,

**மணிவாக்கு**

மனிதன் வெறும் உணவின் உதவியால் மட்டும் உயிர் வாழ்வில்லை. தேவனின் திருவாயிலிருந்து வெளியாகும் அருள்மொழிகளாலும் உயிர்வாழ்கின்றான்.

— இயேசுநாதர்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily

Teiegrams; ''EELANADU'' Jaffna

Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் மாசி மாதம் 9ந் திகதி ( 21 - 2 - 71 )


## எட்டு அம்சம்

அம்பாறையில் நடந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஆண்டு மகாநாட்டில் அக் கட்சியின் தலைவரான பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக தலைமைப் பேருரை நிகழ்த்துகையில் எட்டு அம்சத் திட்டமொன்றையும் வெளியிட்டிருந்தார். இத் திட்டம் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் மட்டுமல்ல குறிப்பாக இதர கட்சிகளும் பொதுவாக நாட்டு மக்கள் அனைவரும் ஏற்றுச்செயற்படுத்த முன்வரவேண்டிய திட்டமாகும்.

O அத்தியாவசியப் பொருள்களை நாமே உற்பத்தி செய்யவேண்டும். O வெளிநாடுகளுக்கு நமது பணத்தை அனுப்பி இறக்குமதிசெய்து பாவிக்கும் பொருள்களின் பாவனையைக் குறைக்கவேண்டும். O எல்லோரும் கடுமையாக உழைக்கவேண்டும். O எளிமையான சிக்கனவாழ்வு வாழவேண்டும். O சமூக சமத்துவம் இருக்கவேண்டும். O லஞ்ச ஊழல்களை ஒழிக்கவேண்டும். O அரசாங்க சொத்துக்களைப் பாதுகாக்கவேண்டும். O கடமையைக் கட்டுப்பாட்டுடனும் கண்ணியமாகவும் செய்ய வேண்டும்.

இவையே பிரதமர் வெளியிட்ட எட்டு அம்சத்திட்டத்தின் சாரமாகும். இந்தத் திட்டம் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஆண்டு மகாநாட்டில் வெளியிடப்பட்ட போதும் ஒருகட்சியினர் மட்டும் நிறைவேற்றி வெற்றி காணக்கூடிய திட்டமல்ல. சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையிலான கூட்டணி மிகப் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிபீடத்துக்கு வந்துள்ளதால் ''அப்பே ஆண்டுவ'' என்று சிங்களத்தில் சொல்லப்படும் ''எங்கள் அரசாங்கம்'' என்பது ''எங்கள் அரசாங்கம் தானே; நாங்கள் எதையும் செய்யலாம் எப்படியும் நடக்கலாம்'' என்ற மனப்பான்மை சிலர் மத்தியில் தோன்றி கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதற்கு இடமில்லாது போனதால்தான் பிரதமர் இதை இந்த மகாநாட்டில் வலியுறுத்திக் கூறவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

கூட்டணியினர் ஆட்சி பீடத்திலமர்ந்ததும் பிரதமர் நாட்டு மக்களுக்கு விடுத்த முதல்செய்தியிலும் அதன் பின்னர் நிதி அமைச்சர்; வீடமைப்பு அமைச்சர் ஆகியோர் பொதுவைபவங்களில் கலந்துகொண்டு பேசுகையிலும் கடின உழைப்பின் அவசியத்தையும் கடமை, கண்ணியம் ஆகியவற்றின் தேவையையும் வலியுறுத்தி வந்திருக்கின்றனர். சோஷலிஸம் என்பது சும்மா கிடைக்கக்கூடிய சரக்கல்ல. கடுமையான உழைப்பின் மூலமே சோஷலிஸத்தை அடையமுடியும். கடும் உழைப்பு இல்லாவிடில் அமைச்சர்களும் மற்றும் பலரும் அஞ்சுவதுபோன்ற பிற்போக்குச் சக்திகள் தலை தூக்கிவிடும்.

கடும் உழைப்பு அரசாங்க அலுவலகங்களிலும் கூட்டுத் தாபனங்களிலும் மட்டுமல்லாது வயல்களிலும் ஆலைகளிலும் தனியார்துறைகளிலும் ஏன் ஒவ்வொரு வீடுகளிலும் கூட அவசியம் அப்போதுதான் நாடு முன்னேறமுடியும்.

கூட்டணியிலுள்ள கட்சிகளின் கட்டுப்பாட்டின் கீழ் பல தொழிற்சங்கங்கள் இயங்குகின்றன. இச் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு கடும் உழைப்பின் அவசியத்தை வலியுறுத்துவது அரசாங்கம் ஓரளவாவது பலனடைவதற்கு வழிவகுக்கும்.

இதேசமயம் இதர அரசியல் கட்சித் தலைவர்களையும் தொழிற்சங்கத் தலைவர்களையும், மற்றும் பொது நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் அழைத்து கடும் உழைப்பின் அவசியத்தையும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் பிரதமர் எடுத்துக் கூறி அவர்களின் ஒத்துழைப்பையும் உதவியையும் கோரினால் அது வீண்போகமுடியாது.

## நீதி அரசர் ஸ்ரீஸ்கந்தராஜா தம்பதிகளின்

### ஞாபகார்த்தப் பிரசங்கங்கள்

சிவபதமடைந்த சிவநெறிச்செல்வர் உயர்திரு நீதியரசர் சைவசிகாமணி பொன் ஸ்ரீஸ்கந்தராஜா, அவரது துணைவியார் கண்மணி ஸ்ரீஸ்கந்தராஜா இவர்களது ஞாபகார்த்த சொற்பொழிவுகளை நிகழ்த்த வாகீச கலாநிதி திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் இம் மாதம் 21-ந் திகதி ஈழம் வருகின்றார்கள்.

இம் மாதம் 23-ந் திகதி திங்கட்கிழமை மாலை 6 மணி தொண்டமனாறு செல்வச் சந்நிதியில் 'அனுபூதி' எனும் விஷயம் பற்றியும், மறுநாள் 23-ந் திகதி செவ்வாய் சிவராத்திரியன்று இரவு 8 மணிக்கு திருக்கேதீச்சரத்தில் 'திருக்கேதீச்சரமும் சிவராத்திரியும், 25-ந் திகதி வியாழன் மாலை 5 மணிக்கு கொழும்பு கொம்பெனித் தெரு சைவமுன்னேற்றச் சங்கத்தின் சங்க வளவில் 'சமய வாழ்வு'. அன்றே இரவு 7-30 மணிக்கு வட கொழும்பு இந்து பரிபாலன சங்கத்தில் 'கோவில் வழிபாடு' பற்றியும், 26-ந் திகதி வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு கொழும்பு செட்டியார் தெரு ஸ்ரீமுத்து விநாயகர் கோவிலில் 'சிவத்தொண்டு' பற்றியும், 27-ந் திகதி மாலை 6 மணிக்கு 'சைவத்தின் சிறப்பு' என்பது பற்றி கொழும்பு அகில இலங்கை இந்துமாமன்றம்-சரஸ்வதி மண்டபத்திலும் சொற்பொழிவாற்ற ஏற்பாடாகியுள்ளதாக அந்தத் தம்பதிகளின் புதல்வரான டாக்டர் எஸ்.பி ஸ்ரீஸ்கந்தராஜா அறிவிக்கின்றார்.

# வரதராச பண்டிதரின் சிவராத்திரி

# கணபதிப்பிள்ளை உரையும்

# அறிஞர்கள் பாராட்டு

பல்லாண்டுகளுக்கு முன்னே சுன்னாகம் வரதராச பண்டிதரால் யாக்கப்பெற்ற சிவராத்திரி புராணம் மூன்றாம் முறையாகவும் புதிய உரையுடன் வெளிவரவிருக்கிறது. யாழ்ப்பாணம் ஸ்ரீகாந்தா அச்சக உரிமையாளரான திரு. மு. கணபதிப்பிள்ளையினால் உரை எழுதப்பெற்ற இந்நூல் இப்போது சிவராத்திரியை முன்னிட்டு இம்மாதம் 22-ம் திகதி வெளியிடப்படவிருக்கிறது. பண்டிதமணி உள்ளிட்டு நூலைப்பார்வையிட்ட பல சைவத் தமிழறிஞர்களும் திரு. கணபதிப்பிள்ளையின் முயற்சியையும் உரைச் சிறப்பையும் பாராட்டிப் புகழ்ந்துள்ளனர். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் வாழ்த்தும் பாராட்டும் வருமாறு:

### பண்டிதமணியின் வாழ்த்தும் பாராட்டும்

ஒருகாலத்தில் தமிழ்நாடு முழுவதிலும்விஜயம் செய்து ஆயிரக்கணக்கில் பிரசங்க மழை பொழிந்தவரும், செட்டிநாட்டில், செட்டிநாட்டுராசாக்களின் மதிப்பைப் பெற்று மிக்க கண்ணியத்துடன் வாழ்ந்து வந்தவரும், இப்பொழுது மிக மிக மெலிந்து தனித்து ஒடுங்கிக் கொண்டிருப்பவருமான பண்டித சிரேரத்தினம் வ. மு. இரத்தினேசுவரையர் சிவராத்திரி புராணம்பாடிய வரதராச பண்டிதரின்வழித் தோன்றல்

வெகுகாலத்துக்கு முன்னமே காசியிலிருந்து வந்து, சுன்னாகத்தில் வசித்த பாரத்துவாச கோத்திரத்துப் பிராமணோத்தமர் ஒருவரின் வழித்தோன்றல் வரதராச பண்டிதர்

யாழ்ப்பாணத்துத் தலைசிறந்த புலவரான சின்னத்தம்பிப் புலவரும் மற்றொரு சிறந்த புலவரான மாதகல் மயில்வாகனப்புலவரும், சிவராத்திரி புராணத்தை மதித்துச் சிறப்புப்பாயிரஞ் செய்திருக்கின்றார்கள்.

சிவராத்திரி புராணம் சிவராத்திரி காலத்தில் கோயில்களிலும் வேறு புண்ணியத்தானங்களிலும் பேணிப் படித்துப் பொருள்சொல்லப்பட்டு வருகின்றது. பல்லாயிரக்கணக்கானவர்கள் விரதம் அநுட்டித்துப் புராணங் கேட்டு ஆத்மசாந்தியடைகின்றார்கள்.

சில பக்குவான்மாக்கள் ஆதிமமுனைப்பு அடங்கி திருவருளின் தூண்டுதலுக்கு ஆட்பட்டு பேயொன்றுந் தன்மைபிறந்து தம் செயலுக்குத் தாம் பொறுப்பின்றி, தாம் செய்யுஞ் செயலைத் தாமறியாமலே செய்து, செயலனைத்தும் சிவ புண்ணியமாய் வீடு பெறெய்துகின்றன. அவை செய்யும் வினை நல்வினையுமன்று, தீவினையுமன்று, சிவவினை. இதன் இரகசியம்நம் புத்திக்கெட்டாதது. சிந்தனைக்குரியது.

ஆட்பாலவர்க்கருளும் வண்ணமும் ஆதிமாண்பும் கேட்பானளவில்லை கிளக்க வேண்டா' என்பது சம்பந்தப்பெருமானின் திருவாக்கு

சிவராத்திரி புராணத்தில் வரும் சுகுமாரன் கதையும் அதுபோல்வனவும், முசுகுந்தச் சக்கரவர்த்தியின் பூர்வ ஜென்ம வரலாறு கண்ணப்பர் வரலாறு போன்றவைகளோடு சேர்த்துச் சிந்திக்கற்பாலனவாம்'

ஆத்ம முனைப்படங்காத நாம் செய்த செய்கின்ற செய்யும் பாவங்களனைத்தும் சிவராத்திரி நித்திரை விழிப்பால் தீர்ந்துபோம் என்று தீர்ப்புச் செய்து விடக் கூடாது.

மிக்க சிந்தனைக்குரியதும் நம்மைப் பரிசோதித்துச் சுத்தி செய்தற்குபகாரமானதுமான சிவராத்திரி புராணத்தை உரையுடன் நல்ல முறையில் அச்சிட்டு தமது சஷ்டியப்த பூர்த்தியை முன்னிட்டு வெளியிட்டிருக்கின்றார். ஸ்ரீகாந்தா அச்சக அதிபர் திரு மு கணபதிப்பிள்ளை. இவர் தெய்வபக்தியும் நற்பணியும் வாய்ந்த புண்ணியசீலர் இவரியல்பு சமயச்சார்பான இலவச வெளியீடுகளால் சைவ உலகு முன்னமே அறிந்தது.

ஸ்ரீகாந்தா அச்சக அதிபர் என்றும்இளமையோடிருந்து நல்ல காரியங்களைச் செய்தற்குச் சைவ உலகு ஊக்கம் அளிப்பதாக.

### பழமையும்புதுமையும் கலந்தமைந்த வெளியீடு

பண்டிதமணி திரு ந. சுப்பையாபிள்ளை தமது செய்தியில் குறிப்பிட்டிருப்பவை வருமாறு:

'சிவராத்திரி புராணம்' எனும் இந்நூல் மகா சிவராத்திரி விரததினம் உத்தமோத்தம சிவவிரத புண்ணிய தினமாகிய வரலாறும் அவ்விரத அனுஷ்டிப்பினால் உண்டாகும் பெரும் பலன்களையும், சிவராத்திரி, மகா சிவராத்திரி, யோகசிவராத்திரி, நித்திய சிவராத்திரி, மாசசிவராத்திரி, பக்ஷ (பக்ஷ) சிவராத்திரி என்று ஐந்து வகைப்பட்டிருத்தலையும் அவற்றைக் கைக்கொண்டு அனுட்டிக்கும் முறைகளையும் அவ்வவற்றின் பயன்களையும் சைவாகமங்களிற் கூறப்பட்ட முறைப்படி விரித்து விளக்குகின்றது. அவ் விரதங்களை அனுட்டித்துப் பேறுகள் பெற்ற முன்னோர்களின் சரிதைகளையும் விரித்து விளக்குகின்றது.

இச் சிவராத்திரி புராணத்தை மகா சிவராத்திரி விரத புண்ணிய காலத்தில் ஆலயங்களிலும் வீடுகளிலும் சைவமக்கள் பத்தி சிரத்தையுடன் படித்தும் கேட்டும் பயன்பெறும் வழக்கம் முற்றொட்டு இது காலம்வரையில் நடைபெறுகின்றது. இத்தகைய பெருமை வாய்ந்த இப் புராண நூல் உரையுடன் முன்பு வேறு இருவரால் இரு பதிப்புக்கள் வெளிவந்துள்ளன. அவை இக்காலத்திற் பெறமுடியாதவைகள் இந்தபுராணத்திலுள்ள அடிமுடிதேடு படலத்தை விரத காலத்தில் படித்தும் கேட்டும் வருவதையும் அறிகிறோம். சிவராத்திரி புராண உரை கிடைக்கப்பெறாத குறை நீங்குதலையே இலட்சியமாகக் கொண்டு ஆசிரிய பதவிக் கடனை நிறைவேற்றி ஒய்வுபெற்றுள்ள மறவன் புலோ திரு மு, கணபதிப்பிள்ளை அவர்கள் இப்பொழுது தாம் மூன்றாம் பதிப்பாக வெளிவர அச்சிடுவித்து உபகரித்துள்ளார்

தமிழ்க் கல்வியறிவிற் குறைந்தவர்களும் அதனை வளர்க்க விரும்புபவர்களும் இலக்கியச்சுவை (காவியச் சுவை) களை நுகர்ந்து இன்புற விரும்பும் எவரும் படித்து விளங்கிப் பயன்பெறத் தக்க வகையிற் செய்யுட்களெல்லாவற்றையும் சந்தங் கெடாமல் இசையுடன் புராண படனம் பண்ணப் பாடங்களைச் செய்ய (வும் ஏற்பச்) சந்திபிரிக்காமலும் அவற்றிற்கு அனுசரணையான பொருள் விளக்கம் உதிப்பதன் பொருட்டு அச் செய்யுள் ரூபகக் கடினசந்தி பிரித்துச் செய்யுள் வடிவாகப் பதவுரைக்கு முற்படக் காட்சியளிக்கவும் தக்கனவாகப் பழமையும் புதுமையும் கலந்தமைந்த வெளியீடாகப் பதிப்பித்துள்ளார். இம்முறை பாடங்கருத்தே சொல்வகை சொற்பொருள் என்று நன்னூலில் கூறப்பட்ட பதினன்கு வகையாக உரைக்கப்படும் உரை வகையுள் சொல்வகை என்ற உரையைத் தழுவிய முறையாகும் எனலாம்

இவர்செய்த இன் நன்றிக்குப் பொதுவாகத் தமிழுலகமும், சிறப்பாகச் சைவவுலகமும் போற்றி இந்நூலைஆதரிக்கும் நன்றிக்கட்டுப்பாடு உடையதாகின்றது.

முன்னைநாள் சென்னை லாயோலா கல்லூரித் தலைமைத்தமிழ் விரிவுரையாளரான திரு. கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை தெரிவித்துள்ளதாவது:

சுன்னாகம் மகாகவி வரத பண்டிதர் இயற்றிய சிவராத்திரிபுராணம் என்னும் நூல் தமிழறிஞர் உடுப்பிட்டி திரு. ம.குமாரசூரியப்பிள்ளை அவர்களுடைய சிறந்த உரையோடு ஸ்ரீகாந்தா அச்சக அதிபர் திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்களின் நன்முயற்சியால் இப்போது வெளிவந்துள்ளது. இந்நூல் எத்துணைச் சிறப்போடு அச்சிட முடியுமோ அத்துணைச் சிறப்போடு அச்சிடப்பட்டுக் கண்கவர் வனப்புமிக்கமிளிர்கின்றது. நூலைப்படிப்பவர்களுக்கு உபயோகப்படும் வகையில் நூலாசிரியர் வரலாறும், உரையாசிரியர் வரலாறும் செவ்வனே அமைந்துள்ளன. யாழ்ப்பாணத்துப் புலவர்களது நூல்கள் அருகிப்போகும் இக்காலத்தில் அவற்றைவெளியிடும்பெரும் பணியில் மிக்க ஆர்வத்தோடு தொண்டுபுரியும் பிள்ளை அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது.

### 'யாவருக்கும் பயன்தரவல்லது'

ஆண்களும் பெண்களும் எழுத வாசிக்கப் பழகிஇருக்கும் இக்காலத்தில் பாட்டு வடிவத்தில் இருக்கும் இப் புராணத்தைப்படித்து விளங்க உரையும் கிடைத்துள்ளது. சைவமக்கள் செய்த புண்ணியமாகும் இப்போது வெளிவரும் மூன்றாவது பதிப்பு புதிதாக ஒரு சிறப்புக்கொண்டு விளங்குகின்றது. ஒவ்வொரு பாட்டுக்குக்கீழே அப்பாட்டுச் சந்தி பிரித்து இலகுவாக்கித் தரப்பட்டுள்ளது. தமிழறிவு கூடினவருக்கும், மட்டமானவருக்கும், குறைந்தவருக்கும் அதாவது எல்லோருக்கும் தத்தம் ஆற்றலுக்கேற்ப காலத்தை வீண் போக்காது நூலிற்கருத்தை இறக்கிப் பயன் கொள்ளத்தக்க முறையில் மூன்றும் பதிப்பு வெளிவருவது நாம் எல்லோரும் பாராட்டவேண்டிய தொன்றாகும்.

—வித்துவான் க. கார்த்திகேயன்

...டப்பற்ற சிவபுண்ணிய ...டுயற்சி

'சிவராத்திரி விரத... சைவசமயிகள் யாவராலு... ஆவசியகம் அநுட்டிக்க... தக்கது' என்று நாவலர்பெ... மான் அறுதியிட்டு ஆணையி... கின்றார். சிவராத்திரி விரத... தின் மகிமைகளைச் சிறந்... முறையில் விரிவாக அறி... மக்கள் ஆவலுற்ற கால... தில், எம் நாடு செய்த தவ... பயனால் இற்றைக்கு இ... நூற்றைம்பது ஆண்டுகளு... க்கு முன்பே யாழ்ப்பாண... தில் அவதரித்த வரதராச... கவிராயர் என்ற அந்தண... குல திலகம் சிவராத்தி... புராணத்தைப்பாடி அளி... தார்

வரதராஜ கவிராயர்... யாழ்ப்பாணத்திலே மயி... வாகனப்புலவர், சின்ன... தம்பிப்புலவர் முதலியவ... வாழ்ந்த காலத்துப் புலவர்... பல சிறப்புகளெல்லா... நிறைந்த புலவர் பெருமா... ரால் இயற்றப்பட்ட இ... நூல் பல வாண்டுகளுக்... முன்னர் உடுப்பிட்டி குமா... சூரியப்பிள்ளையின் அரி... உரைவிளக்கம் பெற்று... பின்னர் வெளிவந்த...

### சிவராத்திரி

தாவடி ச...

கொக்குவில் மேற்கு சைவ... வாலிபர் சங்கத்தினர் சிவ... ராத்திரி தினத்தன்று திரு... கேதீச்சரத்தில்பஜனைசெய்... வுள்ளனர்.

மேற்படி சங்கத்தைச்சே... ந்த 50 பேர் கொண்ட ஒ... குழுவும் திருக்கேதீச்சரயா... திரையை மேற்கொள்ளஇ... க்கின்றது.

0 0 0

### வண்ணார்பண்ணையில்

யாழ்ப்பாணம், ச...

யாழ் வண்ணை அரச... விநாயகர் இந்து இளைஞ... மன்றத்தினரால்சிவராத்தி... விழா அரசடி விநாயகர் ஆ... யத்தில் கொண்டாடப்ப... விருக்கின்றது. கலைநிகழ்ச்... கள், வில்லுப்பாட்டு, இ... னிசை, பக்திப்பாடல்க... நகைச்சுவை நாடகம் ஆ... யன இவ்விழாவில் இட... பெறவுள்ளன.

0 0 0

### சந்நிதியில்

வல்வெட்டித்துறைச...

தொண்டமானாறு செ... வச்சந்நிதி கோவிலில் ம... சிவராத்திரி உற்சவத்... முன்னிட்டு அன்றையதின... நான்கு ஜாமமும் விசே... பூசை நடைபெறும். அன்... மாலை கலாவினோதன் தி... கே என் கணபதிப்பிள்... யின் வில்லுப்பாட்டும். ஆ... வையூர் அருட்கவி சி. வி... சித்தம்பியின் 'கடம்பனு... இடும்பனும்' என்ற விட... பற்றி கதாப்பிரசங்கமு... சங்கீதக் கச்சேரிகளும் இட... பெறும்.

0 0 0

### நெடுந்தீவில்

நெடுந்தீவு, ச...

நெடுந்தீவு கிழக்கு ... மாவன பிள்ளையார் ஆல... தில் இம்முறையும் மகாசி... ராத்திரி பூஜையும் அன்... தானமும், கலைநிகழ்ச்... களும் வழமைபோல் ந... விருக்கின்றன.

0 0 0

### வேலணையில்

வேலணை ச...

வேலணை பெருங்குள... முத்துமாரியம்மன் ஆல... தில் சிவராத்திரி வி... கொண்டாடப்பட வி... கிறது. அன்று அதிகாலை... மணிக்கு அம்பிகை அலங்... க்கப்பட்ட ரதத்தில் ... களாவடி வழியாக ... வலம் வந்து முருகமூர்... ஆலயத்திற்குச் சென்று ... அதிகாலை வெள்ளைக் க... கரைக் கேணியில் தீர்... மாடும் வைபவம் இட... பெறும்.

# ...திரி புராணமும்

...சிவபுண்ணிய
...த்திரி விரதஞ்
...கள் யாவராலும்
...ம் அநுட்டிக்கத்
...ன்று நாவலர்பெரு
...தியிட்டு ஆணையிடு
...வராத்திரி விரதத்
...மைகளைச் சிறந்த
... விரிவாக அறிய
...வலுற்ற காலத்
...ாடு செய்த தவப்
... இற்றைக்கு இரு
...பது ஆண்டுகளு
...ப யாழ்ப்பாணத்
...ரித்த வரதராஜ
... என்ற அந்தண
...கம் சிவராத்திரி
...தைப்பாடி அளித்

...ஜ கவிராயர்,
...ணத்திலே மயில்
...லவர், சின்னத்
...வர் முதலியவர்
...ாலத்துப் புலவர்.
...றப்புகளெல்லாம்
...புலவர் பெருமாளு
...ற்றப்பட்ட இந்
... வாண்டுகளுக்கு
...டுப்பிட்டி குமார
...ளையின் அரிய
...கம் பெற்றும்
...வெளிவந்தது

மேலும் சில ஆண்டுகள் கழித்துத் தும்பைநகர் பிரம்மஸ்ரீ ச. சோமசுந்தர வையராலும் மறுபதிப்புப் பெற்று வெளிவந்தது.

இப்போது அதன் பிரதிகள் கிடைப்பது அரிதாகி விட்டது. இது பொதுவாக நம் யாழ்ப்பாணத்துப் பெரியவர்களின் நூல்களுக்கு உண்டாகும் ஒரு பரிதாபகரமான நிலை. நூல்கள் எத்துணைச் சிறப்பினவாயினும், எவ்வளவு புலமை பெற்றவரால் இயற்றப்பட்டனவாயினும் அதனைப் பாதுகாத்து அடுத்த சந்ததியினருக்கு வழங்கும் இயல்பு எம்மவரிடத்தில் இல்லை. இக்காரணத்தால் ஈழநாட்டில் இயற்றப்பட்ட பல அரிய பெரிய தமிழ்நூல்கள் அழிந்து, ஒழிந்து விட்டன.

அந்த அவலநிலை இவ் வருமருந்தான சிவராத்திரி புராணத்துக்கு நேராவண்ணம் கைகொடுத்துதவ முன்வந்தார் சைவப்பெரியார் மு. கணபதிப்பிள்ளை அவர்கள். சி. சிவகுருநாதன் எம். ஏ (தலைவர், யாழ் தமிழ் நூற் பதிப்புக்கழகம்) மற்றும் வித்துவான் க. ந. வேலன், பண்டிதர் த. சுப்பிரமணியம், பண்டிதர் வ. நடராசா, சைவப்புலவர் இ. செல்லத்துரை, சைவ பரிபாலன சபைத்தலைவர் திரு. வே. நாகலிங்கம் ஆகியோரும் இச் சிவராத்திரிபுராண நூலை பாராட்டியுள்ளனர்.

## ...ராத்திரி

...தாவடி, சனி
...ில் மேற்கு சைவ
...சங்கத்தினர் சிவ
...னத்தன்று திருக்
...ில்பஜனைசெய்ய

...சங்கத்தைச்சேர்
...பர் கொண்ட ஒரு
...ருக்கேதீச்சரயாத்
...மேற்கொள்ளஇரு

0 0

## ...பண்ணையில்

...ாழ்ப்பாணம், சனி
...வண்ணை அரசடி
... இந்த இளைஞர்
...வரால்சிவராத்திரி
...டி விநாயகர் ஆல
...கொண்டாடப்பட
...து. கலைநிகழ்ச்சி
...லுப்பாட்டு, இன்
... பக்திப்பாடல்கள்
...வ நாடகம் ஆகி
...விழாவில் இடம்
...ன.

0 0

## ...ல்

...வட்டித்துறைசனி
...ாமாளுறு செல்
...கோவிலின் மகா
...ரி உற்சவத்தை
... அன்றையதினம்
...ாமமும் விசேட
...பெறும். அன்று
...விநோதன் திரு.
... கணபதிப்பிள்ளை
...லுப்பாட்டும். அவ
...ுடுக்கவி சி. விநோ
...ின் 'கடம்பனும்
...ம்' என்ற விடயம்
...தசப்பிரசங்கமும்
...ச்சேரிகளும் இடம்

0 0

## ...வில்

...நெடுந்தீவு, சனி
...வு கிழக்கு ஆல
...ிள்ளையார் ஆலயத்
...முறையும் மகாசிவ
...பூஜையும் அன்ன
... கலைநிகழ்ச்சி
...மைபோல் நிகழ
...ன.

0 0

## ...யில்

...வேலணை சனி
... பெருங்குளம்
...ியம்மன் ஆலயத்
...வராத்திரி விழா
...டப்பட விருக்
...ன்று அதிகாலை 2
...ம்பிகை அலங்காரி
...ரதத்தில் வங்
... வழியாக வீதி
...த முருகமூர்த்தி
...க்குச் சென்று பின்
... வெள்ளைக் கடற்
...ணியில் தீர்த்த
... வைபவம் இடம்

# மாணவர்களுக்கு விமான வசதி

பருத்தித்துறை சனி

பலகாலமாக கல்வித்திணைக்களத்துடன் தொடர்புற்றிருந்த இலங்கை விமானப் போக்குவரத்துப் பகுதி மீண்டும் அத்தொடர்பை மேற்கொண்டுள்ளது.

ஆசிரியர் முன்போல காசோலை கொண்டு விமானப்போக்குவரத்து நிலையத்திற்கு அலையவேண்டியதில்லை என்றும், புலைகவண்டி வாறண்டுகளுடனே தங்கள் குடும்பத்துடன் காங்கேசன்துறையிலிருந்து திருக்கோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, கொழும்பு, கல்லோயா ஆகிய பகுதிகளுக்கு விமானமூலம் பிரயாணம் செய்யலாமென்றும் இலங்கை விமானப் பகுதியினர் சகல பாடசாலைகளுக்கும் அறிவித்துள்ளனர்.

குறைந்தது 44 மாணவர் சேர்ந்து ஆளுக்கு ரூபா 10 கட்டணம் செலுத்தினால் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் விமானமூலம் சுற்றிப் பார்க்கலாமென்றும் விமானப் போக்குவரத்துப் பகுதி அறிவித்துள்ளது.

## பாஸ்போட் பிரிவு இடமாற்றம்

வெள்ளவத்தை, சனி

இலங்கை குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் ஒரு பகுதியான பாஸ்போட் பிரிவு தற்போது பழைய இடத்திலிருந்து கொழும்பு துறைமுக சரக்குக் கூட்டுத்தாபனத்திற்கு அண்மையில் உள்ள புதிய கட்டிடம் ஒன்றிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## கலைவிழா

வெள்ளவத்தை சனி

அமரர் கே. கானிமுத்துவின் ஞாபகார்த்தமாக ஜனுப் எஸ். ஏ. மௌலானு ஜே. பி. தலைமையில் சலோமி செல்லையாவின் கலைவிழா மார்ச் மாதம் 18-ம் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கலை நிகழ்ச்சிகளாக 'இது ஒரு பைத்தியம்' (நாடகம்). செல்வி ரோஹிணியின் நடனம், மன்னர் மைந்தன் (நாடகம்). மெஹமட் சாலி குழுவினரின் இசை விருந்து, கலையும் கண்ணீரும் (நாடகம்) கிங் பாருக் குழுவினரின் லிம்போ நடனம் ஆகியன இடம் பெறும்.

## திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம், சனி

பரந்தன் பயிர்ச் செய்கைக்குழுவால் புதிதாகக் கட்டப்பட்ட காரியாலயத்தை சமத்தொழில் உதவி யாணையாளர் திரு. கே. சபாரத்தினம் திறந்து வைத்தார்.

தம்பருக்கு அஞ்சலி

# "சிக்கலான பிரச்னைகளுக்கும் தீர்வு சொல்லக்கூடியவர்"

— என். சபாரத்தினம் —

(முன்னுள் ஒய்வு பெற்ற அதிபர், யாழ். இந்துக்கல்லூரி)

தீர்க்க முடியாத நிலைமையிலிருக்கும் எந்தவிதமான சிக்கலான பிரச்னைகளையும் மிக இலகுவாக தீர்ப்பதற்கு வழிகாட்டிவிட்டு அதைப்பற்றி அசாதாரணமாக இருக்கும், மனநிலையை உடையவராகவும் ஒரு பொருளைப் பற்றி பேசமுன் அதனை நன்கு அறிந்திருப்பது மட்டுமன்றி அக்கூட்டத்தில் உள்ளவர்களை பற்றியும் நன்கு அறிந்திருக்கும், சக்தி படைத்தவராகவும் திரு. தம்பர் விளங்கி வந்தார்.

அகில இலங்கை ஆசிரியர் சங்க முன்னுள் தலைவரும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்னுள் அதிபருமான திரு. என். சபாரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. சபாரத்தினம்மேலும் கூறியதாவது: அகில இலங்கை ஆசிரியர் சங்க தலைவராகவும், 'இலங்கை ஆசிரியன் என்ற சஞ்சிகையின் ஆசிரியராகவும் திரு. தம்பர் இருந்து வந்த காலத்தில் அவருடன் நெருங்கிய தொடர்பு கொள்ளவேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. வாழ்நாள் முழுவதும் கல்வியின் வளர்ச்சிக்காகவும் அதன் நன்மைக்காகவும் ஆசிய உலகின் ஒற்றுமைக்காகவும் உழைத்து வந்தார். ஒருவரையோ அல்லது ஒரு விஷயத்தையோ முதல் தடவை பார்த்ததுமே அது எப்படிப்பட்டதென்பதை இலகுவில் தெரிந்து கொள்ளக் கூடிய வன்மை படைத்தவராக விளங்கினுர்.

தெளிந்த மனமும்; தீர்க்க தரிசனமும்; நாவடக்கமும் பற்பல சந்தர்ப்பங்களின் போது அவரை ஒரு சமுகத் தொண்டனுக எடுத்துக் காட்டியது உண்மையான ஆசிரியன் என்ற முறையில் அவர் எந்தப் பிரச்னையையும் தீர்ப்பதற்கு முன்னுல் அதனைப்பற்றி முதலில் நன்கு ஆராய்ந்து அறிந்து கொள்வார்.

இலங்கையின் ஜனநாயக வளர்ச்சிக்கு இலவசக் கல்வி எவ்வளவு தூரம் பயனளிக்கும் என்பதை நன்கு அறிந்திருந்த அவர் இலவசக் கல்விக்கு பற்பல கட்டங்களில் ஏற்பட்டு வந்த இடையூறுகளை நெஞ்சுரத்துடனும் தொடர்ச்சியாகவும் எதிர்த்து போராடி வெற்றி கண்டார்.

தாய்மொழிமூலம் கல்வி போதிப்பதற்கு போதிய ஆதரவு இல்லாத காலத்தில் பற்பல திசைகளால் எதிர்ப்புத் தோன்றிய காலத்தில் உயர்வகுப்புகளிலும் தாய் மொழிமூலம் கல்வி போதிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தி வந்தோடு அதுபற்றி நாட்டின் பல பாகங்களில் நடந்த கருத்தரங்குகளிலும் கலந்து கொண்டார்' அவர் கனவு இன்று நினைவாகிவிட்டது. இன்று உயர் கல்விபெல்லாம் தாய்மொழியிலேயே போதிக்கப்படுகிறது.

அதுமட்டுமல்ல கல்வித் திட்டத்தில் புதிய தோர் மாற்றம்செய்யாவிடில்எதிர் காலத்தில் நிச்சயம் கல்வியில் பெரும் குழப்பம் ஏற்படும் என சம்பந்தப்பட்டவர்களை எச்சரிக்கை செய்து வைத்தார். வெறும் ஏட்டுப் படிப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் இந்த நாட்டுப் பிரச்னைகளை தீர்க்க முடியாதென்றும் தொழிற் கல்விக்கும் இடமளிக்க வேண்டும் என்பதை சுட்டிக் காட்டினுர். 20 வருடங்களுக்கு முன்னர் அவர் தீர்க்க தரிசனமாக கூறியவையெல்லாம் இன்று உண்மையாக காணப்படுகிறது.

பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் விஷயத்தில் அகில இலங்கை ஆசிரியர் சங்கம் இரண்டு பட்டிருந்த வேளையில் சரியான ஆலோசனையை கூறி ஆசிரியர்கள் மதியில் ஒற்றுமையை ஏற்படுத்தியதோடு அரசாங்கத் திட்டத்தைஆதரிக்காமலும் எதிர்க்காமலும் நடுநிலைமை வகிக்கச் செய்து அதன்மூலம் பின்னர் பல நன்மைகள் கிடைக்க வழி வகுத்தார்.

பல தரப்பட்ட ஆசிரியர்கள் ஒருவருக்கொருவர் பகைமையாக இருந்தாலும் அவர்கள் எல்லோருடனும் ஒரே நேரத்தில் நண்பனுக விளங்குவது மட்டுமன்றி நாளடைவில் அவர்களிடையேயும் பகைமையை மறக்கச் செய்யும் பண்பாளராக விளங்கி வந்தார் எந்தப் பிரச்னைக்கும் இலகுவில் ஒரு விதிமுறையை கண்டுபிடித்து விடுவதில் திறமைசாலியாக விளங்கினுர்.

சேவை நிலைமை பற்றியும் சம்பள விஷயம் பற்றியும் உள்ள கோரிக்கைகளில் கட்சி கட்டிக்கொண்டிருக்கும் ஆசிரியர்களை ஒற்றுமைப்படுத்தி ஒரு ஐக்கிய முன்னணியை உருவாக்குவதற்கு கடந்த காலத்தில் ஆயராது உழைத்துவந்தார் என்பதை ஆசிரியர் உலகம் என்றுமே மறக்காது.

ஆசிரியர்கள் ஒற்றுமைபட்டு ஒரே அடிப்படையில் ஒத்துழைத்து ஐக்கியத்தை நிலைநாட்டுவதன் மூலம் தான் அவரை நாம் என்றும் நினைவில் வைத்துக் கொள்ள முடியும். உண்மையான கல்விக் கொள்கையை செயல் படுத்துவதிலும் கல்வி நிர்வாகத்திலும் கட்டுப்பாட்டிலும் ஆசிரியர்களின் குரலுக்கு மதிப்பு இருக்க வேண்டும் என்பது காலஞ் சென்ற தம்பரின் கனவாகும். அவர் விட்டுச் சென்ற நற்பணிகளை நிறைவேற்றுவதன் மூலம் அவரின் கனவுகளை நனவாக்குவோம்.

# ஜெயராஜ் எழுதுவது

தம்பர் மாஸ்டர் மறைந்தார் என்ற செய்தியைக் கேட்டதும் எனக்குப் பெரிய இடி விழுந்ததுபோல் இருந்தது! உற்ற ஒரு நண்பரை, வழிகாட்டியை, ஒரு மேதாவியை இழந்துவிட்டேன். 'ஈழநாடு'க்கு ஏற்பட்ட நஷ்டம் சிறிதல்ல. ஆரம்பமுதல் அவர் ஆஸ்பத்திரிக்குச் செல்லும்வரை, அவ்வப்போது தேவையான நல்யோசனைகளைக் கூறி உதவியுள்ளார். கல்வி விஷயமாகப் பல மேலான தலையங்கங்களைத் தீட்டினுர். கட்டுரைகள் பல எழுதினுர். நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக, ஈழத்தின், சிறப்பாக யாழ்ப்பாணத்தின் பொதுவாழ்வில் ஈடுபட்டு, பல அரசியல் தலைவர்களுக்கும் யோசனை கூறிவந்தவராவர். நடமாடும் ஒரு 'பேரகராதி' பல்லாண்டுகளுக்குமுன் நடந்த அரசியல் விஷயங்களையெல்லாம், இலங்கையில் மட்டுமல்ல, இந்திய அரசியலில் நடந்துள்ளனவும் அவர் நுணுக்கமாக அறிந்தவர். அரசியல், கல்வி சமூகம், மக்கள் இவர்களைப் பற்றி ஏதாவது சந்தேகம் வந்தால், அவர்தான் சமய சஞ்சீவியாக விளக்குவார். அவருக்கு எவ்வளவோ கடமைப்பட்டுள்ளேன்! அவரைப் போன்ற ஒருவர் எங்களுக்கு இனி வேறு யார் கிடைக்கப்போகிறுர்கள்?

0 0 0

எந்த விஷயத்திலும் சரி அவர் விரிந்தமனப்பான்மை கொண்டவர். சாதி, சமயம் மொழி, கட்சி முதலியவற்றில் அவருக்குக் குறுகிய எண்ணங்கள் கிடையாது. உடலுக்கு ஏதும் நோய் வந்தால் அதைத் தீர்த்துக் கொள்ள வைத்தியரிடம் செல்லுவோம். ஆனுல் வாழ்க்கையிலே அன்ருடம் நமக்கு எவ்வளவோ சிக்கல்கள் ஏற்படுகின்றன. அவற்றைத் தீர்த்துக்கொள்வதென்று திகைப்பவர்கள் தம்பர் மாஸ்டர் வீட்டுக்குத்தான் செல்வார்கள் விருப்பு வெறுப்புச் சிறிதுமின்றி, தெளிவான வழியைக்காட்டுவார். சிக்கல்களும் தீர்ந்துவிடும். அவர் வீட்டிலே பகல் இரவு எந்நேரமும் நீண்ட 'கியூ'வரிசை நிற்கும். எல்லாரும் தங்கள் சிக்கல்களை அவரிடம் சொல்லி தீர்த்துக்கொள்ளத் தான் வருவார்கள். சற்றும் சலுப்பின்றி வந்தவர்களுக்கெல்லாம் ஆறுதல் கூறி நல்வழி காட்டிய மேலான உபகாரியவர். இனி அவ்விதம் உதவக் கூடியவர் யார் இருக்கிருர்கள்?

0 0 0

பரோபகாரம் செய்பவர்கள் நம்மிடையே மிக அரிது நாமும் நமது குடும்பமும் நன்ருக இருந்தாற் போதும் என்று நம்மில் பலரும் நினைப்போம். பிறரைப் பற்றிக் கவலைப்படுபவர்கள் எவ்வளவு பேர்? உபத்திரவம் செய்யாமல் இருந்தாலே பெரிய காரியம். ஆனுல் தம்பர் மாஸ்டரோ, தம்மிடம் இல்லாவிடினும் பிறரிடம் சென்றும், வந்தவர்களுக்கு உபசாரம் செய்து, அவர்களது சங்கடத்தைத் தீர்க்க முயலுவார். மற்றவரின் கஷ்டங்களைத் தமது கஷ்டமாக நினைத்த பரோபகாரி இவ்விதம் வரையின்றி உதவி, அவரே சங்கடத்துக்கு உள்ளாவார். கருணை உள்ளம் படைத்த இவரைப்போன்றவரை இனி எங்கே காணப் போகிருேம்?

1929-ம் வருடம் மகாத்மா காந்தி அவர்களை ஈழத்துக்கு வரச்செய்த பெருமை தம்பர் மாஸ்டரையே சேர்ந்தது. அப்போது வயது 23 தான். யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் சார்பாக இந்தியா சென்று, மகாத்மாவிடம் பேசி, அவரை இலங்கைக்கு வருமாறு கேட்டுக்கொண்டார். கதர் நிதிக்குப் பணம் சேர்க்க அவரும் ஒப்புக்கொண்டு, இலங்கை எங்கும் சுற்றுப்பிரயாணம்செய்தார். அதை வெற்றிகரமாக நிறைவேற்றி, ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் (அக்காலத்தில் மிக மதிப்பு) கதர் நிதிக்குத் திரட்டிக்கொடுத்து, மகாத்மாவின் தரிசனமும், நல்லுரையும் இங்கு பலருக்கும் கிடைக்கும்படி செய்தது. ஈழ சரித்திரத்தில் இடம்பெற்ற விஷயமாகும். தம்பர் மாஸ்டர் ஒரு தனிப்பட்ட மனிதர் அல்ல. அவர் ஒரு 'தேசிய ஸ்தாபனம்'! அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தார், கணக்கற்ற அன்பர்கள் இவர்களுடன் 'ஈழநாடு'ம் சேர்ந்து கண்ணீர் வடித்துத் தனது நன்றிக் காணிக்கையைச் செலுத்துகின்றது.

## இறுதி அஞ்சலி

யாழ்ப்பாணம், ஞாயிறு

காலஞ்சென்ற ஏ. ஈ. தம்பரின் ஈமக்கிரிகையில் கலந்துகொண்டு அன்னருக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகள் பல மூடப்பட்டன.

சில பாடசாலைகள் சில மணித்தியாலம் பட்டன, யாழ் இந்துக்கல்லூரி 3 மணிக்கும், வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம் 2 1/2 மணிக்கும் மூடப்பட்டன.

இப்பாடசாலைகளின் மாணவர்கள் ஆசிரியர்கள் யாவரும் மறைந்த சிறந்த சமூகத் தொண்டரும், யாழ்ப்பாணத்தின் சிறந்த கல்வி மான்களில் ஒருவருமான திரு. ஏ. ஈ. தம்பருக்கு மலர் வளையங்கள் வைத்து தமது இறுதி அஞ்சலியையும் மரியாதையையும் செலுத்தினர்.

## முதலாளித்துவ...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

படுத்த வேண்டும் அதற்கு அடிகோலுவதாய் இந்த மகாநாடு அமையலாம். அரசாங்க மாற்றத்தோடு மக்கள் பல தொல்லைகளுக்கு ஆளாகியுள்ளார்கள் இதற்கு முக்கிய காரணம்கூட முன்னைய அரசே ஆட்சி எங்கள் கையில் இருந்தாலும்கூட இன்றும் தோட்டமுதலாளிமார்களின் ஆதிக்கம் அகலவில்லை. அந்த முட்டுக்கட்டை தொடர்ந்தும் நீடிக்க விடமாட்டோம். தோட்டம் சம்பந்தமாக நன்கு அறிந்த ஒருவர் நமது அமைச்சரவையில் இருக்கின்றுர் அவர்தான் அமைச்சர் கொல்வின் அவர் மக்களை நன்குபுரிந்து வைத்துள்ளவர் அதுமட்டுமல்ல தோட்டங்களில் நடக்கும் அநியாய சம்பவங்கள் இனியும் தொடராது. அவற்றை ஒழித்துக்கட்ட சட்டம் இயற்றியுள்ளோம் தொழிலாளர் நலன் கருதி இவை ஏற்படுத்தப்பட்டுள்ளன' என்றுர்.

# தமிழ்நாடு தேர்தல்களம்

# 'புதிய பேச்சாளர் மக்களை குழப்புகிறார்கள்'

— எம் ஜி. ஆர்.

# 'சிவாஜிக்கு சோடா வேண்டாம்'

— சிவாஜி மன்றத்தலைவர்

சென்னை, பெப் 20

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. கக்கனுடைய உறவினர்களுக்கு அவர்கள் ஆட்சியின்போது நிலப் பட்டாக்கள் வழங்கப்பட்டதாக ஒரு கூட்டத்தில் முதல்வர் கருணாநிதி கூறினார்.

இதற்கு பதிலளிக்குமுகமாக திரு. கக்கன் விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

அரிஜனர் என்ற வகையிலேயே தமது உறவினர்கள் நிலப்பட்டாக்கள் பெற்றதாகவும், ஆனால் புலவர் கோவிந்தன், எம் ஜி. ராமச்சந்திரன், முதல்வர் மைத்துனர் சிதம்பரம் ஜெயராமன் ஆகியவர்களின் உறவினர்கள் அரிஜனராய் இல்லாமலிருந்தும் தி மு க ஆட்சியில் நிலப் பட்டா பெற்றிருக்கிறார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

### பிரகாசமாய் இருக்கிறதாம்

லோகசபை தேர்தலிலும் தமிழக சட்டமன்றத்தேர்தலிலும் ஜனநாயக கூட்டணிக்கு பிரகாசமான வாய்ப்புகள் இருப்பதாக திரு. காமராஜும் திரு. நிஜலிங்கப்பாவும் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

கலைக்கப்பட்ட தமிழ்நாடு சட்டசபை உறுப்பினரும் இந்திரா கட்சிப் பிரமுகருமான திரு. ஏ. சேனாபதி கவுண்டர் இந்திரா காங்கிரஸ் கட்சியிலிருந்து ராஜினாமா செய்துள்ளார். இவர் கோவைமாவட்டம் பொங்கலூர் சட்டசபைத் தொகுதியல் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுகிறார். காங்கிரஸ் கட்சியின் தான்தோன்றித்தனம் பிடிக்காததினாலேயே அவர் ராஜினாமா செய்துள்ளதாக கூறப்படுகிறது.

### சிவாஜிக்கு சோடா கொடுக்காதீர்

நடிகர் திலகம், தமிழ்நாடு முழுவதும் சூறாவளி பிரசாரம் செய்துவருகிறார். தினமும் பத்துக்கு மேற்பட்ட கூட்டங்களில் கலந்துகொள்கிறார். அகிலஇந்திய சிவாஜி ரசிகர்மன்ற தலைவர் சின்னஅண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கையில் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. சிவாஜிக்கு சோடா கொடுக்கவும் முயற்சிக்கவேண்டாம். அவர் இருக்கும் வண்டிக்கு அருகில் வந்து தங்கள் அவர் கையை எட்டிப்பிடிக்கவும் முயற்சிக்க வேண்டாம்" இவை பேரன்பினால் உற்சாகத்தினால் செய்யப்பட்டாலும் இவை சிவாஜியின் பெரும் பயணத்திற்கு இடையூறாக அமையும்.

சென்னை செம்பியம் சுப்பிரமணியம் தோட்டத்தில் உள்ள காமராஜர் இரவு பாடசாலையின் பொருளாளர் திரு. பாலராமன் வீட்டிற்கு இரவுநேரத்தில் விஷமிகளால் தீ வைக்கப்பட்டது. இதுசம்பந்தமாக பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது. வீட்டில் தீப்பற்றியபோது உள்ளே இருந்தவர்கள் கூக்குரல் எழுப்பினார்கள். அவர்களை அயலவர்கள் காப்பாற்றினார்கள்.

### எம். ஜி. ஆர். தேர்தல் பிரசாரம்

தஞ்சைமாவட்டத்தில் எம். ஜி. ஆர். சூறாவளி தேர்தல் பிரசாரம் செய்து வருகிறார்: நேற்று அவர் தஞ்சை மாவட்டத்தில் சுற்றுப்பயணத்தை ஆரம்பித்தார். இரவு 2 மணிக்கு குடந்தை போய்சேர்ந்தார் அங்கு நடந்தகூட்டத்தில் அவர்பேசும்போது தமிழகத்தில் இப்போது புதுப்பேச்சாளர்கள் புறப்பட்டிருக்கிறார்கள் என்றும் இவர்கள் மக்களை குழப்பிவருகிறார்கள் என்றும் கூறினார். இவரது பேச்சைக் கேட்க லட்சக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

சென்னை எழும்பூர் சட்டமன்ற தொகுதி தி மு.கழக அபேட்சகர் திரு அரங்கண்ணல் தனது மனைவி ஆண்டாள் அம்மாளுடன் சென்று நேற்று வோட்டுக்கேட்டார். அவர்களுடன் பெருந்திரளான ஆதரவாளர்களும் சென்றுகொண்டிருந்தனர். ஒவ்வொரு இல்லங்கள் தோறும் கடைகள் தோறும் அவர்களை அன்புடன் வரவேற்றனர்.

சென்னை மயிலாப்பூர் வியாபாரிகள்சங்கம், தி. மு. கழக அபேட்சகர்களை ஆதரிப்பதென நேற்று கூடி முடிவுசெய்துள்ளது. முரசொலிமாறன், மா. பொ. சி. அரங்கண்ணல் வெற்றிக்காக ஆதரவு திரட்டுவதென்றும் சங்கம் முடிவுசெய்துள்ளது.

### அரிசி கிடைக்காது

தென் ஆற்காடு மாவட்டத்தில் தேர்தல் பிரசாரம் செய்துவரும் முதல் அமைச்சர் திரு. கருணாநிதி அங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் சிண்டிகேட் ஆட்சிக்கு வந்தால் அரிசி கிடைக்காது' என்று கூறினார். பகல் 12 மணிக்கு திட்டக்குடியில் தொடங்கி நேற்று அதிகாலை 2-45 மணிக்கு உளுந்தூர்பேட்டையில் பிரசாரத்தை முடித்தார்.

### சுவரொட்டிகள்

சென்னை நகரெங்கும் தேர்தல் சுவரொட்டிகள் காணப்படுகின்றன. அறிஞர் அண்ணாவின் படத்தை தாங்கிய சுவரொட்டி ஒன்றில் "தாய்மொழி தாய்நாடு முன்னேற்றக்காண தம்பி 71 தேர்தலில் உன் தூய பணியை தொடங்கிவிட்டாயா? என்று எழுதப்பட்டிருக்கிறது. இச்சுவரொட்டி முக்கிய இடங்களில் எல்லாம் ஒட்டப்பட்டிருக்கிறது. அறிஞர் அண்ணா மடியில் ஒரு குழந்தையை வைத்துக்கொண்டு காட்சியளிக்கிறார். இதுதவிர சிண்டிகேட்டினரை கேலிசெய்யும் வகையில் கார்ட்டூன் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளன. பல இடங்களில், வீடுகளுக்கு முன்னால் உதயசூரியன் கோலமிடப்பட்டிருக்கிறது. நேற்று சென்னை தேனாம்பேட்டை 104-வது வட்டத்தில் வி. வி. கோயில் தெருவில் தி. மு. க. தேர்தல் அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

சட்டமன்ற அபேட்சகர் டி வி நாராயணசாமியும், முரசொலிமாறனும், நேரில் வந்து அலுவலகத்தை திறந்து வைத்தார்கள்.

சிறுபான்மை வகுப்பை சேர்ந்த சுமார் 200 மாணவர்களை நேற்று முன்தினம் பொலிஸார் கைதுசெய்தனர். பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கான உதவித்தொகையை அதிகரிக்கும்படி, இம்மாணவர்கள் கோஷம் எழுப்பிக்கொண்டு ஊர்வலமாக சென்றபோதே பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

ஸ்ரீபெரம்புத்தூர் சட்டசபை தொகுதி தி மு கழக அபேட்சகர் திரு இராஜரத்தினம், கிராமம் கிராமமாக சென்று ஆதரவு திரட்டிவருகிறார் வயலில் வேலைசெய்து கொண்டிருந்த பெண்களிடமும் அவர் ஓட்டுக் கேட்டார். அங்கிருந்த பெண்கள், 'உதய சூரியனுக்குத்தான் நாங்கள் ஓட்டுப்போடுவோம் என்று கூறினார்கள், முனியம்மாள் (வயது 80) என்ற மூதாட்டி நெற்கதிர்களால் செய்த மாலையை திரு இராசரத்தினத்திற்கு சூட்டினார்.

சென்னை மைலாப்பூர் சட்டமன்ற அபேட்சகர் திரு. ம பொ சிவஞானம் நேற்று மைலாப்பூர் பகுதியிலும், மாங்கொல்லையிலும் ஓட்டு சேகரித்தார். தெருவெங்கும் அவருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

### கருணாநிதி மகன் நடித்தார்

முதல் அமைச்சர் கருணாநிதியின் மகனை முத்து தென்திசை தீபம் என்ற நாடகத்தில் நடித்தார். இந்நாடகம் நேற்று தஞ்சாவூரில் நடந்தது. முரசொலி அடியார் எழுதிய இந்த நாடகத்தில், கருணாநிதியின் மகன் புரட்சி நடிகர் எம் ஜி ஆர் வேடத்தில் தோன்றி நடித்தார் இந்த நாடகத்தை ஈரோட்டிலும் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

### புதுமுறைப்பிரசாரம்

புரசவாக்கம் சட்டமன்ற தொகுதி தி. மு. கழக வேட்பாளர் திரு. அன்பழகன் நேற்று சைக்கிள் ரிக்ஷாவில் வீதி வீதியாகசென்று ஓட்டுக்கேட்டார். மக்கள் வீதியின் இரு கரையிலும் திரண்டுநின்று வரவேற்று மாலை சூட்டினார்கள். சில இடங்களில் பெண்கள் ஆலாத்தி எடுத்தார்கள். பாண்டுவாத்தியம் முழங்க அவர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

(8-ம் பக்கம் பார்க்க)



உங்கள் மண் பொன் விளையும் பூமியாக வளம் பெற...

சுமார் முக்கால் நூற்றாண்டு காலமாக இலங்கையின் விவசாயத் துறைக்கு அதி சிறந்த உர வகைகள், விவசாய ரசாயனப் பொருள்கள், தெளி கருவிகள் ஆகியவற்றை வழங்கி, இலங்கை மக்களின் காணி பூமிகளை வளமாக்கி, அவர்கள் அதிக விளைச்சலையும் அபரிமித இலாபத்தையும் பெறத் துணை நின்று வரும் முன்னோடி ஸ்தாபனம் பவர்ஸ். நீங்களும் உங்கள் மண்ணை வளமாக்கி செழிப்பான விளைச்சலைப் பெற பவர்ஸ் பொருள்களையே பாவியுங்கள்.

ஏ.பவர் அன் கொம்பனி லிமிடெட்

த. பெ. இல. 11. கொழும்பு.

# மின் ஒளி உதைபந்தாட்டம் வெற்றி தோல்வி இல்லை

மாவிட்டபுரம், சனி

வடக்கில் முதல் தடவையாக மின்னொளியில் நடந்த உதைபந்தாட்டப் போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிந்தன.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் கூட்டிங் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி பழைய மாணவர்களும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா பழைய மாணவர்களும் மோதியதில் இருபகுதியினரும் தலா 2 கோல்களைப் போட்டதால் போட்டி வெற்றிதோல்வியின்றிமுடிந்தது. யூனியன் கல்லூரி பழைய மாணவர் குழுவைச் சேர்ந்த அருந்தவராசா இரு கோலையும், ஸ்கந்தா கோஷ்டியைச் சேர்ந்த அன்ரன் இரு கோலையும் போட்டனர். இப்போட்டிக்கு த. சிவலிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

இதையடுத்து நடந்த மகாஜனா பழைய மாணவர் குழு—சென் பற்றிக்ஸ் பழைய மாணவர் குழுப் போட்டி மிகவும் விறுவிறுப்பாக இருந்தபோதும் இறுதியில் இருதரப்பினரும் தலா 1 கோலைப் போட்டதால் வெற்றி தோல்வியின்றி முடிந்தது. இப்போட்டிக்கு திரு. தனபாலசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார். பிரதமவிருந்தினராக காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் எஸ். முனசிங்க, தெல்லிப்பளை கிராமசபைத் தலைவர் திரு. எம். சிதம்பரநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி அண்மையில் யாழ் விளையாட்டரங்கில் ஆரம்பமானது. இதுவரை நடைபெற்று முடிந்த போட்டிகளின் முடிவுகள் சில வருமாறு:

## சென். ஜோசப் வெற்றி

யாழ்ப்பாண சென். ஜோசப் விளையாட்டுக் கழகத்துக்கும், குருநகர் ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற 'பி' பிரிவுப் போட்டியில் சென் ஜோசப் விளையாட்டுக் கழகம் 5-0 கோல்களால் வெற்றி பெற்றது.

## அரியாலை வெற்றி

அரியாலை விளையாட்டுக் கழகத்துக்கும், குருநகர் யுத்கவுன்ஸில் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் அரியாலை விளையாட்டுக் கழகம் 6-3 கோல்களால் வெற்றி பெற்றது.

## றொம்பஸ் வெற்றி

வதிரி றொம்பஸ் விளையாட்டுக் கழகத்துக்கும், வல்வெட்டித்துறை விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் றொம்பஸ் விளையாட்டுக் கழகம் 6-0 கோல்களால் வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகத்துக்கும், ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெறவிருந்த போட்டியில், ஆட்ட நேரம் தொடங்கும்வரை ஊர்காவற்றுறைக் கோஷ்டி மைதானத்துக்கு வரவில்லை, கிறீன்பீல்ட் கோஷ்டி மட்டுமே மைதானத்துக்கு வந்திருந்தது. (தே. நி)

## யுனெஸ்கோ நிபுணர் பாராட்டு!

பருத்தித்துறை, சனி

வடபகுதியில் உள்ள தொண்டமானாறு, வல்லை, மருதங்கேணி, நாகர் கோவில் ஆகிய இடங்களில் வடபகுதி விஞ்ஞான ஆசிரியரும் மாணவரும் நடாத்திவரும் நீரியல் உயிரியல் ஆராய்ச்சிகளை அவதானித்து வந்த யுனெஸ்கோ சூழலியல் நிபுணர் திரு. ஏ. டபிள்யு. ரோறி இவ்வித விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகள், இத்துணை திறம்பட தென்கிழக்காசியாவில் எப்பகுதியிலுமோ தாம் காணவில்லையென்று கூறியுள்ளார். இத்திட்டங்களுக்குச் சமுதாயம் அளிக்கும் ஒத்துழைப்பையும் அவர் பாராட்டினார்.

தொண்டமானாற்றில் நிறுவப்பட்டுள்ள வெளிக்கள வேலை நிறுவனத்தையும் அவர் பாராட்டினார் நீரியல்-உயிரியல் பகுதியினருக்கும் வடபகுதியிலுள்ள சில உயர்தர கல்லூரிகளுக்கும் முகாமிடும் உபகரணங்களும் தாம் பெற்றுக் கொடுக்கவிருப்பதாகவும் திரு. ரோறி கூறினார்.

......

## புதியபுனர் அமைப்பு மக்களுக்கு நன்மை அளிக்கும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பொதுமக்கள் அத்தியாவசியப்பொருட்களை நியாயமான விலையில் பெறக்கூடிய நிலை உருவாக வேண்டும். இத்தகைய நிலையை உருவாக்க தற்போது நடைபெற்று வரும் கூட்டுறவு புனர் நிர்மாணம் வழிவகுக்கும் இவ்வாறு கே. மயில்வாகனம் வடபகுதிக் கூட்டுறவுத் தொழிலாளர் மகாநாட்டில் பேசும்போது கூறினார்.

தொடர்ந்து அவர் மேலும் கூறியதாவது:-

கூட்டுறவு இயக்கமும். கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனமும் பரஸ்பரம் இணைந்து மக்களுடைய அத்தியாவசியப் பொருட்களை வழங்க வேண்டும். புனர் அமைப்பின் பின்வடபகுதிகூட்டுறவு இயக்கத்தினர் மக்களுக்கு கூடுதலான சேவையைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றனர்.'' (கு. வி. ம.)

......

### சென். பற்றிக்ஸ்

## இன்னிங்ஸால் வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி இன்னிங்ஸால் வெற்றி பெற்றது.

இப்போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (தே. நி)

# 'அரசியல் மாற்றங்களைத் தடுப்பதற்கே இந்த ஒற்றுமை'



யாழ்ப்பாணம், ஞாயிறு

இந்த நாட்டு அரசியலின் எந்தெந்தக் கட்டத்தில் பிற்போக்குவாதிகளின் பதவிகளுக்கும் பணக்கோட்டைகளுக்கும் ஆபத்து ஏற்படுகிறதோ அந்தக் கட்டத்தில் எல்லாம் அவர்களிடையே ஒற்றுமைகள் ஏற்படுவது புதிய விஷயங்கள் அல்ல. யாழ் மேயர் பதவியைப் பிடித்திடவும், யு. என். பி. கட்சியை ஆட்சிபீடத்தில் வைத்திடவும் ஏற்கனவே ஒற்றுமைப்பட்ட தமிழ்க் கட்சியினர்தான் வல்வையில் ஒற்றுமைப்பட்டிருக்கிறார்கள். ஒன்பது அம்சத் திட்டம் என்ற போர்வையில் ஏற்பட்டிருக்கும் இந்த அரசியல் முட்டுக்கட்டையை நாம் சரியாகப் புரிந்துகொள்ளாவிடின் நாம் சென்று கொண்டிருக்கும் பாதையில் பல தொல்லைகளை இந்தக் கோஷ்டியினர் ஏற்படுத்தலாம்,

நீர்வேலி முற்போக்கு வாலிபர் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. வி. அரியரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: தமிழர்கள் துண்டு துண்டாக வெட்டப்பட்ட பொழுது ஏற்பட்டிருக்க வேண்டிய ஒற்றுமை, தமிழ் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டபொழுது ஏற்பட்டிருக்கவேண்டிய ஒற்றுமை, தமிழர் சொத்துக்கள் சூறையாடப்பட்டபொழுது ஏற்பட்டிருக்கவேண்டிய ஒற்றுமை, மலைநாட்டுத் தமிழர் அடிமைகளாக்கப்பட்ட பொழுது ஏற்பட்டிருக்க வேண்டிய ஒற்றுமை, தமிழ் மொழிக்கு ஆபத்து வந்த பொழுது ஏற்பட்டிருக்க வேண்டிய ஒற்றுமை பல்கலைக் கழகத்தை நிறுவுவதில் ஏற்பட்டிருக்கவேண்டிய ஒற்றுமை இப்போ எதிலே ஏற்பட்டிருக்கிறது. ஆண்டாண்டு காலமாக இவர்கள் அனுபவித்து வந்த சுகபோகங்களை தொடர்ந்து அனுபவிக்க முடியாத நிலையை இன்றைய அரசியல் மாற்றங்கள் ஏற்படுத்துவதை தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் இந்த ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது.

தொழிலாள, விவசாயமக்கள், ஏழைகள், வசதியற்றவர்கள், ஒதுக்கப்பட்ட இனத்தவர் போன்றவர்களின் நல்வாழ்வுக்காக இந்த ஒற்றுமை ஏற்பட்டிருந்தால் இந்த வர்க்கத்தினர் இன்று ஏற்றிருக்கும் தலைமைப் பீடத்தில் உள்ளவர்களான திரு. வ. பொன்னம்பலம், அ. வைத்திலிங்கம், ஏ. விஸ்வநாதன் போன்றவர்கள் இந்த ஒற்றுமை மாநாட்டுக்கு அழைக்கப்படாததன் காரணம் என்ன?

தமது சுயநலத்தைப் பாதுகாக்க ஏற்பட்ட இந்த ஒற்றுமையே இவ்வளவு பலவீனமானதாக இருக்கிற பொழுது பொதுநலத்திற்கா இதயபூர்வமான ஒற்றுமை ஏற்படப்போகிறது.

இன்று தமிழ் மக்களுக்கு தேவையானது இப்படிப்பட்ட போலி ஒற்றுமைகள் அல்ல. சாதாரண மக்களை வதைத்துக்கொண்டிருக்கும் பசி, பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம், சீதனக்கொடுமை பிணி, மருத்துவ வசதியின்மை, போக்குவரத்துப் பிரச்னை, பாடசாலைப் பிரச்னை போன்ற வாழ்க்கைப் பிரச்னைகள் தீர்ந்திட தொழிலாள விவசாய மக்களிடையே இனமதபேதமின்றி ஏற்படும் முற்போக்கான ஒற்றுமைகளே வழி வகுக்கும்.

— அரியரத்தினம்

# 'தமிழ் பேசும் அரசாங்க ஊழியர் அதிருப்தி'

## அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம் அறிக்கை

வெள்ளவத்தை, சனி

"புதிய அரசியலமைப்பு நகல்திட்டம் சம்பந்தமாக அரசியலமைப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள அடிப்படைத்தீர்மானங்கள் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. பொதுவாக சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு பாதகமான அநீதியான சட்டதிட்டங்களுக்கும் அரசியலாரால் கைக்கொள்ளப்படும் கைங்கரியங்களுக்கும் தஞ்சம் புகும் நீதி பரிபாலனம் கைவிடப்பட்டுள்ளமை மிகுந்த ஏமாற்றத்தைத்தந்துள்ளது."

இவ்வாறு கூறும் அறிக்கையொன்றினை அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம் வெளியிட்டுள்ளது. இவ்வறிக்கை மேலும் தெரிவிப்பதாவது:

"உண்மையான சோஷலிசம் நாட்டில் உருவாக வேண்டுமானால் அந்நாட்டில் நீதிபரிபாலனம் நன்குசெயல்படவேண்டும் தனிமனிதனின் சுதந்திரத்தை, அவனுக்குஇழைக்கப்படும் அநீதிகளை அகற்றி உரிமைகளை நிலைநாட்டும் நீதிபரிபாலனத்தை அகற்றுவது, செயலிழக்கச் செய்வது தனிமனிதனின் உத்தரவாதத்தை அடிப்படை உரிமையினைச் சூறையாடுவதற்கு ஒப்பாகும்.

எம்மைப் பொறுத்தமட்டில் எமக்கு அரசியலாரால் இழைக்கப்பட்ட பலஇன்னல்களுக்கு நீதிமன்றம் தக்க பாதுகாப்பு அளித்தது என்பது குறிப்பிடத்தக்கது உதாரணமாக மொழிவழித் தொழிற்சங்கங்கள் நடாத்திய கோடீஸ்வரன் வழக்கு ஒருஎடுத்துக்காட்டு, அப்படியாக பொதுமக்களின் நம்பிக்கைக்கும் கௌரவத்துக்குமுரிய ஒரு பிரகாசமுள்ள ஸ்தாபனத்தை "தேசிய அசெம்பிளி நிறைவேற்றக்கூடிய சட்டங்கள் பற்றி நீதிபரிபாலன ஸ்தாபனம் எதுவும் விசாரிக்கவோ அல்லது அவை செல்லுபடியாகாதெனத் தீர்ப்பளிக்கவோ முடியாது. அது அரசியல் நிர்ணயக் கோர்ட் ஒன்றினாலேயே முடியும்" என வரைந்திருப்பது எமக்குத் தாங்கொணாத் துயரத்தையும் வேதனையையும் அளிக்கிறது. ஆட்சியாளர் இந்த மனிதனின் அடிப்படை உரிமையை எச்சந்தர்ப்பத்திலும் நிலைநாட்ட வழி செய்வார்கள் என நம்புகிறோம்.

......

## பெற்றார் ஆசிரியர் சங்கம்

மாவிட்டபுரம், சனி

சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலை பெற்றார் ஆசிரியர் சங்க விசேட கூட்டம் பாடசாலை அதிபர் க. மழவராயர் தலைமையில் நடைபெற்றபோது புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் க. மழவராயர், உபதலைவர்: இராசரத்தினம், இணைக்காரியதரிசிகள்: இ. சிவசுப்பிரமணியம், எஸ். பொன்னுத்துரை தனாதிகாரி எஸ். இராசலிங்கம். நிர்வாகசபையொன்றும்தெரிவு செய்யப்பட்டது.

பரந்தனில்

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பரந்தன் இரசாயன கூட்டுஸ்தாபன உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் யாழ்ப்பாண இ. போ. ச. உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் ஒரு சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி இன்று பரந்தன் இரசாயன கூட்டுஸ்தாபன மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது. (தே நி)

......

## கணேசா வெற்றி

உடும்பராய், சனி

உரும்பராய் கணேசாவிளையாட்டுக் கழகமும், உரும்பராய் சிங்கள் கண்டி விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் கணேசா கழகம் 8—1 கோல்களால் வெற்றிபெற்றது.

கணேசா கழகத்தைச் சேர்ந்த சண்முகராசா, செல்வராசா, மதுரைநாயகம், மூர்த்தி, குயாசீலன் ஆகியோர் கோல்களைப் போட்டனர்.

சிங்கள்கண்டி கோஷ்டியினர் சார்பில் ரத்னரட்ணம் ஒரு கோலைப் போட்டார்.

வலிகாமம் கிழக்கு காரியாதிகாரி பிரிவினரின் ஆதரவில் இப்போட்டி நடைபெற்றது. திரு. இராசேந்திரம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். கணேசா கோஷ்டி காப்டன் தங்கராஜா திறமையாக விளையாடி சிறந்த உதைபந்தாட்ட வீரன் எனப் பார்வையாளரின் பாராட்டைப் பெற்றார்.

......

## வயல்களில் கள்வர்

சுழிபுரம், சனி

பொன்னாலை வயல்களிலுள்ள நெற்பயிர்கள் வைக்கோல்கள் களவுபோகின்றனவாம், இரவில் கள்வர்களின் நடமாட்டம் இப்பகுதியில் அதிகமாக இருக்கிறதாம்.

## ஆசிரியர்கள் இல்லாத பாடசாலை

யாழ்ப்பாணம், ஞாயிறு

நட்டான்கண்டல் அரசினர் தமிழ்ப் பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களில் ஒருவர் இடமாற்றப்பட்டார். மற்றவர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்குச் சென்றுவிட்டார்.

பாடசாலை, ஆசிரியர்கள் இன்றி மூடப்பட்டிருக்கின்றது. மாணவர்கள் ஒவ்வொரு நாளும் பாடசாலைக்கு வந்து ஆசிரியர் இல்லாததால் திரும்பிச் செல்லுகின்றனராம். (குவிம)

கனகரத்தினம் ம. ம. வித்தியாலயத்திலிருந்து

# வர்த்தக பட்டம் பெற 4 மாணவர் தேர்வு

யாழ்ப்பாணம், ஞாயிறு வித்தியோதய பல்கலைக் கழகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டவர்த்தகப்பட்டதாரிகள் வகுப்புக்கு யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து நான்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து முதல்முறையாக வர்த்தக மாணவர்கள் பட்டம்பெறப் போவது இதுவே முதல் தடவையாகும். யாழ்ப்பாணத்திலிருந்தும், யாழ். மத்திய கல்லூரியிலிருந்தும் சில மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து செல்விகள் எம் ஸி சமரக்கோன், எஸ் மனோன்மணி, செல்வன் ஐ கோபாலகிருஷ்ணன், வி தங்கராசா ஆகியோரே வர்த்தகப் பிரிவில் தேறியுள்ளனர். யாழ்ப்பாணத்திலிருந்து வர்த்தகப் பட்டதாரிப்பட்டம்பெறப் கலைக் கழகம் செல்லும் மாணவர்கள் இவர்களே. இம்மாதம் 25ம்திகதி வகுப்புகள் ஆரம்பமாகிறது.

# "இறந்தவரை காரியாதிகாரி நேரில் எச்சரித்தார்"

## துணுக்காய் கொலை வழக்கு

மட்டுவில், சனி "இறந்தவருக்கு முன்பே பல முறைப்பாடுகள் உண்டு. இதுபற்றிக் காரியாதிகாரிக்கும் எழுதியிருக்கிறேன். இறந்தவரைக் காரியாதிகாரியே நேரில் சென்று எச்சரிக்கை செய்திருக்கிறார். அவருக்கு குடிப் பழக்கமும் உண்டு."

துணுக்காயில் கணவனை வெட்டிக் கொன்றதாக மனைவி மீது குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் சாட்சியமளித்த துணுக்காய் கிராம சேவையாளர் திரு. ஆழ்வார் மார்க்கண்டு கூறினார்.

இவ்வழக்கில் துணுக்காயைச் சேர்ந்த 7 பிள்ளைகளின் தந்தையான மதியாபரணம் என்பவரைப் படுக்கையில் வைத்து வெட்டிக் கொலை செய்ததாக அவர் மனைவியான சிதம்பரம் என்பவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். விசாரணையின்போது கிராம சேவையாளர் தொடர்ந்து கூறியதாவது: "இறந்தவர் எதிரிக்குத் தொல்லை கொடுத்துள்ளதாக முன்பு புகார் செய்யப்பட்டுள்ளது. இறந்தவரைப் பற்றிக் காரியாதிகாரிக்குப் புகார் செய்துள்ளேன். காரியாதிகாரி நேரிலும் சென்று அவரை எச்சரிக்கை செய்துள்ளார். அவருடன் அயலவர்களே ஒற்றுமையில்லை என்பதும் அறிவேன்."

மாஜிஸ்திரேட் மேல்விசாரணையை இம்மாதம் 25ந் திகதிவரை ஒத்திவைத்தார்.

# சேகுவேரா 9 பேர் கைது கைக்குண்டுகளும் பிடிபட்டன

மாத்தறை, சனி நாட்டின் தென்பகுதியில் பயங்கரமான குழப்பங்களையும் நெருக்கடிகளையும் ஏற்படுத்துவதற்காக செய்யப்பட்டு வந்தமுயற்சிகளை பொலிஸார் முறியடித்துவிட்டனர் இந்தப்பயங்கரத்திட்டத்தின் பின்னணியில் உள்ளவர்களை கண்காணிக்கும் வேலையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

மாத்தறை காலி மாவட்டங்களில் பொலிஸாரின் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. சேகுவேரா இயக்கத்தினர் எனச் சந்தேகத்தின் பேரில் ஏற்கனவே 9 பேர் மாத்தறையில் பொலிஸாரினால் கைதுசெய் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அரசாங்க ஸ்தாபனம் ஒன்றை தாக்குவதற்கு திட்டமிட்டிருந்தனர் என்று உயர்தர பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கைதான 9 பேரும் ரிமாண்ட் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு எதிரான சுலோக அட்டைகளும் மாதிரிவரை படங்களும் கைக் குண்டுகள் தயாரிப்பதற்கான பொருட்களும் இவர்களிடம் இருந்ததாகக் கூறப்படுகிறது.

## பவுண் விற்பனை மக்கள் வங்கியிடம்

கோட்டை, சனி தனியார் பொற்கொல்லர்களுக்கு மத்திய வங்கி செய்துவந்த தங்கப் பவுண் விற்பனையை மக்கள் வங்கி பொறுப்பேற்றுள்ளது.

தங்கப் பவுண் விலை அதிகரித்ததால் மத்திய வங்கி அதன் நாணய மாற்றப் பெறுமதியிலும் அதிக பணத்தைச் செலுத்தவேண்டியிருந்ததால் மக்கள் வங்கி தங்கப்பவுண் விற்பனையைக் கையேற்றுள்ளது.

## புதியபேச்சாளர்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதியில், முதல்அமைச்சர் திரு கருணாநிதியை ஆதரித்து கல்லூரி மாணவர்கள் வீடு வீடாக சென்று ஒட்டுக்கேட்டார்கள், பச்சையப்பன் கல்லூரி ஜெயன் கல்லூரி, சட்டக் கல்லூரி ஆகியகல்லூரிகளைச் சேர்ந்த 100 மாணவர்கள் ஒட்டுக் கேட்டார்கள்.

வண்ணாரப்பேட்டைத் தொகுதியில் போட்டியிடும் தி. மு. க. அபேட்சகர் திரு. வேதாசலம் தினமும் வீடுவீடாகச் சென்று ஒட்டுக்கேட்டு வருகிறார். தொடர்ந்து தொகுதி முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்து வாக்காளர்களை சந்தித்து வருகிறார்.

சென்னை நகரில் உள்ள 12 தொகுதிகளின் ஓட்டுக்களும் 2 நாட்கள் எண்ணப்படுகின்றன. ஒரு நாளைக்கு 6 தொகுதிகள் வீதம் எண்ணப்படும், முதல் அமைச்சர் கருணாநிதி போட்டியிடும் சைதாபேட்டைத் தொகுதி திரு. நெடுஞ்செழியன் போட்டியிடும் திருவல்லிக்கேணித் தொகுதி ஆகியவற்றின் ஒட்டு எண்ணிக்கை அடுத்த மாதம் 10-ந் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பத்திரிகை "ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 21-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



காலஞ்சென்ற மத்தியகல்லூரி முன்னாள் அதிபர் திரு. ஏ ஈ. தம்பரின் மரணச் சடங்கின்போது எடுக்கப்பட்ட படங்கள், இவையாகும் மனைவி மக்களுடன் பூதவுடல் முதலாவது படத்திலும், பூதவுடலை யாழ். மத்தியகல்லூரி ஆசிரியர்கள் சுமந்துசெல்வதை இரண்டாவது படத்திலும், இறுதி யாத்திரையின் ஒருபகுதியை மூன்றாவது படத்திலும் காணலாம். படம்: கிட்டு

புதிய அரசியல் திட்டத்துக்கு

# மக்கள் அபிப்பிராயம் கூற மேலும் 10 நாள்

கோட்டை, சனி வழிகாட்டிக் குழுவிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஐந்து பேர் கொண்ட குழு பொது மக்களிடமிருந்து கிடைத்த புதிய அரசியல் திட்டத்திற்கான கருத்துக்களை வகைப் படுத்துகின்றதென அரசியல் திட்ட விவகார அமைச்சர் திரு. கொல்வின் ஆர். டி. சில்வா இன்று செய்தி நிருபர்கள் மத்தியில் பேசும் போது தெரிவித்தார்.

புதிய அரசியல் நிர்ணய சபையின் வழிகாட்டுக் குழு இன்று கூடியது.

அமைச்சர் கொல்வின் ஆர் டி. சில்வா இதுபற்றி மேலுந் தெரிவித்ததாவது. அடுத்த மாதம் 14-ந் திகதி பொது மக்களிடமிருந்து பெற்று வகைசெய்யப்பட்ட அபிப்பிராய ஆலோசனைகளை அரசியல் நிர்ணய சபையிற் சமர்ப்பித்த பின்னர் மேலும் 10 நாட்களுக்கு பொது மக்கள் ஆலோசனை கூற அவகாசம் கொடுக்கப்படும்.

## ஆசிரியர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரியரே கடமையாற்றுகிறார். அவரும் நீண்ட நாள் லீவு எடுத்துச் சென்றதால் அப் பாடசாலையும் மூடப்பட்டுள்ளது. வவனியா வடக்கில் முக்கியப் பாடசாலை நெடுங்கேணி மகாவித்தியாலயமாகும். இம்மகாவித்தியாலயத்தில் பத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு சராசரிப் பிள்ளைகள் கல்வி பயின்றும் ஐந்து ஆசிரியர்களே கடமையாற்றுகிறார்கள். இங்கு இவ்விடயமாகப் பலர் வவனியா கல்வி அதிகாரியிடமும், வவனியா ஆட்சி மன்றஉறுப்பினரிடமும் புகார் செய்துள்ளனர்.

## போலவாட் புளக்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுபோகப்பட்டுஅங்கு அவர் காலமானார். 1946-ம் ஆண்டு தொடக்கமே அவர் சட்ட சபை உறுப்பினராக இருந்துவந்தார்.

தெற்கு கல்கத்தாவில் இன்று நடைபெற்ற ஒரு சம்பவத்தின்போது இரண்டு தீவிரவாதிகள் பொலிசாரால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். இவர்களில் ஒருவர் முக்கிய கொலைகள் சம்பந்தமாகத் தேடப்பட்டவராம்.

## இறுதி யாத்திரை

யாழ்ப்பாணம், ஞாயிறு காலஞ்சென்ற மத்திய கல்லூரி முன்னைநாள் அதிபர் திரு. ஏ. ஈ. தம்பரின் இறுதி யாத்திரையில் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள் உட்பட ஆயிரக்கணக்கான அனுதாபிகள் கலந்துகொண்டனர்.

இறுதி யாத்திரைக்கு முன்னர் தம்பரின் இல்லத்தில் திரு. நேசையா, போதகர் செல்வரத்தினம், திரு. ஹன் டி பேரின்பநாயகம், ஆசிரியர் சங்க கூட்டுச் சம்மேளனத் தலைவர் திரு. ஏ. வைத்திலிங்கம் ஆகியோர் திரு. தம்பருக்கு அஞ்சலி செலுத்திப் பேசினர்.

வெளிநாடுகளிலிருந்தும் பழைய மாணவர்கள் மரணச்சடங்கில் கலந்துகொள்வதற்காக வந்திருந்தனர்.

இறுதி யாத்திரையில் கலந்து கொண்ட பொது மக்கள் கூட்டத்தையும் வாகனப் போக்குவரத்தையும் கட்டுப்படுத்த பொலிஸாரும் பணியாற்றினர்.

புதுடில்லி, பெப். 20 இந்திய முதுபெரும் அரசியற் தலைவரான அசோக் மேத்தா இன்று விஷமிகளின் சதியினால் கொலை செய்யப்படுவதினின்றும் தப்பிவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

RECAL Jaffna
Daily 3 Shows
maxcy
million chell
in
POPKJOPI